பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

பாரதி
கல்வி நிலையம்
சித்தங்கேணி
இன்று ஆரம்பம்
21 - 09 - 1988 WED.
89 & 90 A/L
CHEMISTRY
J. S. R. மக்லி
90 A/L 3.30 p.m
89 A/L 4.30 p.m

# உதயன்

விலை ரூ 2/.

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

பாரதி
கல்வி நிலையம்
சித்தங்கேணி
இன்று ஆரம்பம்
21 - 09 - 1988 WED.
ECONOMICS
சின்னத்தம்பி
89 A/L -Part II
3.30 p.m
90 A/L 4.30 p.m

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஆடி புரட்டாதி மீ 05 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1409 ஸபர் பிறை 09 (21 - 09 - 1988) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 189

# ஜே.வி.பி-அரசு பேச்சுகளில் முட்டுக்கட்டை நிலை!

## பொதுத் தேர்தலா, ஜனதிபதி தேர்தலா முன்பு நடக்கவேண்டும் என்பதில் இழுபறி

— உதயன் கொழும்புச் செய்தியாளர் —

கொழும்பு, செப்டெம்பர் 21

**ஜே. வி. பி. இயக்கத்துக்கும், இலங்கை அரசுக்கும் இடையில் இடம்பெற்று வந்த பேச்சுவார்த்தைகள் முட்டுக் கட்டை நிலையை அடைந்துள்ளதாக அறிய வருகிறது.**

கடந்த பலவாரங்களாக நடைபெற்று வந்த பேச்சுவார்த்தைகளின்போது ஜே வி.பி. தரப்பில் ஜனதிபதிதேர்தலுக்குமுன்னர்பொதுத் தேர்தல் நடைபெற வேண்டும் என வற்புறுத்தப்பட்டு வந்ததாம்.

ஆனல் அரசில் உள்ள முக்கிய புள்ளி ஒருவர் ஜனதிபதித் தேர்தல் தான் முன்பு நடைபெற வேண்டும் என விரும்புகிருராம்.

இதற்குக் காரணம் ஜே.வி.பியும்ஜனதிபதித் தேர்தலுக்கு ஒரு வேட்பாளரை நியமிக்கும் பட்சத்தில் எதிரணியினரின் வாக்குகள் பிரிந்து சிதறிஞல் அரசாங்க வேட்பாளருக்கு கூடுதல் சந்தர்ப்பம் உண்டு எனக் கருதப்பட்டதே எனச் சொல்லப்படுகிறது.

இந்த இழுபறி நிலையால் பேச்சுவார்த்தைகள் முட்டுக்கட்டை நிலையை அடைந்துள்ளதாக மிகப் பிந்திக் கிடைத்த தகவல்கள் மூலம் தெரிய வருகிறது.

### 16 பெண்கைதிகள் விடுவிப்பு

கொழும்பு, செப்.21

தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகச் சந்தேகிக்கப்பட்டு பொலிஸ் காவலில் வைக்கப்பட்டிருந்த பெண்களில் 16 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் 25 பெண்கைதிகள் இவ்வாரம் விடுவிக்கப்படுவர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் அனைவரும் பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-க)

### சுபநேரம்

21 - 09 - 1988
புரட்டாதி - 05
புதன்கிழமை
சுபநேரம்:
04.32 முதல் 06.02வரை
ராகுகாலம்:
12.02முதல் 01.32வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## வவுனியா நகரில் துப்பாக்கிவேட்டு சத்தம்

### இந்தியப் படையினர் சோதனை

வவுனியா, செப் 21

திங்கட்கிழமை இரவு வவுனியா நகரத்தில் உள்ள படையினரின் தடைமுகாம்களிலிருந்து சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது.

இரவு சுமார் 9-45 மணியிலிருந்து 10 மணி வரை இடம்பெற்ற இத் துப்பாக்கிப் பிரயோகம் காரணமாக மக்கள் பீதிக்குள்ளானர்கள்.

இதேவேளையில் வவுனியா - கண்டி வீதியில் உள்ள கல்வித் திணைக்களத்தின் வளவை ஊடறுத்து ஆயுதந் தாங்கிய கோஷ்டி ஒன்று சென்றதாகக் கிடைத்த தகவலை அடுத்து அவ்வீதிக்குள் விரைந்த இந்தியப் படையினர் கல்வித் திணைக்களக் கட்டிடம் முழுதும் பலத்த சோதனை நடத்தினர்.

அங்கிருந்தோரும்விசாரிக்கப்பட்டனர். அதிகாரி இருவரும் காவலாளிகளும் தாக்குதலுக்கு உள்ளாகியதுடன் மூடப்பட்டிருந்த அறைகளும் பலவந்தமாக திறக்கப்பட்டு சோதனையிடப் பட்டன.

செவ்வாய் காலையில் சவ்வி அலுவலகம் தமிழ் மகாவித்தியாலயப் பகுதிகள் படையினரால் சோதனையிடப்பட்டு பாடசாலை விளையாட்டுத்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### முதியோர் வாரம்

கொழும்பு, செப் 21

முதியோர் வாரம் அடுத்த மாதம் 10 ஆம் திகதி முதல் இலங்கையில் அனுஷ்டிக்கப்பட விருக்கிறது. (ஓ-எ)

## 84 இலங்கைப் பெண்கள் எகிப்தில் கைது!

கொழும்பு, செப் 21

சட்ட விரோதமாக எகிப்து சென்று வீட்டுப் பணிப்பெண் தொழில் புரிந்த 84 இலங்கைப் பெண்கள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

செய்ரோவில் இருந்து இலங்கைத் தூதர் ரி. டி. எஸ். ஏ. திஸ்ஸநாயக்கா இத்தகவலை கொழும்புக்கு அனுப்பி இருக்கிறார்.

வெளிநாட்டுப் பணிப் பெண்கள் வேலைசெய்வதற்கு எகிப்து அரசு தடை விதித்திருப்பது தெரிந்ததே (ஓ-எ)

### ஊநூ தலைமறைவு

ரங்கூன், செப் 21

பர்மாவில் இராணுவ ஆட்சி ஏற்பட்டதைத் தொடர்த்து முன்னள் பிரதமர் ஊநூ தலைமறைவாகிவிட்டார் என்று ஏஜென்சிச செய்திகள் தெரிவித்தன.

இதனிடையில் இராணுவ ஆட்சித் தலைவர் செவின் மொங் புதிய அமைச்சரவையை அமைத்தார்.

அதேவேளை ஆயுதங்களை உடனடியாக ஒப்படைக்கும்படி கிளர்ச்சிக்காரர்களுக்கு இராணுவ ஆட்சித் தலைவர் உத்தரவிட்டார். (ஓ-எ)

## 5 புதிய கட்சிகளுக்கு நேற்று அரசியல் அங்கீகாரம்

கொழும்பு, செப். 21

ஐந்து புதிய அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் ஆணையாளர் நேற்று அங்கீகாரம் வழங்கி இருக்கிருர்.

விவரம் வருமாறு;

1. தேசவிமுக்தி ஜனதா கட்சி — நெல்.
2. முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி — குதிரை.
3. ஈழம் தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி — எருது.
4. ஜனநாயக சுதந்திர விடுதலை முன்னணி — நங்கூரம்.
5. தமிழீழ விடுதலை முன்னணி — கப்பல்.

அங்கீகாரம் கோருவதற்கான விண்ணப்பிக்கும் கடைசி நாள் நேற்று இருபதாம் திகதி செவ்வாய்க்கிழமையாகும்.

கடைசி நாளான செவ்வாயன்றுவிண்ணப்பித்த சில அரசியல் கட்சிகளின் விண்ணப்பங்கள் தேர்தல் ஆணையாளரின் பரிசீலனையில் இருக்கிறது என்று அறிவிக்கப்பட்டது. (ஓ-எ)

## பொலீஸாரை அறையினுள் பூட்டி வைத்துவிட்டு ஆயுதங்கள் கொள்ளை

கொழும்பு, செப் 21

பொலீஸ் தடைமுகாம் ஒன்றுக்குள் தன்னியக்கத் துப்பாக்கிகள் சகிதம் வந்த 60 பேரைக் கொண்ட கோஷ்டி ஒன்று அங்கிருந்த துப்பாக்கிகளையும் சீருடைகளையும் அபகரித்துச் சென்றது.

அங்குணகொலபொலஸ்ஸ என்ற பகுதியில் உள்ள தடைமுகாமிலேயே இந்தச் சம்பவம் நடைபெற்றது.

அங்கிருந்த ஐந்து பொலீஸாரையும் அறை ஒன்றினுள் பூட்டி வைத்துவிட்டு மூன்று எஸ் எல். ஆர். ரக துப்பாக்கிகள் ஒரு 84 ரக துப்பாக்கி, ஒரு ரிப்பிற்றர் துப்பாக்கி ஆகியவற்றை அவர்கள் அபகரித்துச் சென்றனர். (ஓ-க)

## கிராமசேவகர் தெரிவுக்கான நேர்முகப் பரீட்சை இல்லை

### அரச அதிபர் தகவல்

யாழ்ப்பாணம் செப் 21

கிராம சேவை அலுவலர் தெரிவுக்கான நேர்முகப் பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் நடைபெறமாட்டாது.

நேர்முகப் பரீட்சையை இங்கு நடத்த முடியாது என்று யாழ். அரச அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு அறிவித்துள்ளார் என அறியவந்துள்ளது.

தற்போது யாழ்ப்பாணத்தில் செயலகம் இயங்காத நிலை காரணமாக கிராமசேவை அலுவலர்களுக்கான நேர்முகப் பரீட்சை நடத்துவது முடியாத காரியமாகும் என்று அவர் அறிவித்துள்ளாராம்.

இதேவேளை இம்மாசம் 23 ஆம் திகதி தொடக்கம் 28 ஆம் திகதி வரைக்கும் உள்ள நாட்களில் கிராமசேவை அலுவலர்களுக்கான நேர்முக பரீட்சைகள் நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்களும் அனுப்பப்பட்டிருந்தன. (ஓ-10)

### முக்கூட்டுப் படைத் தளபதி யாழ். வருகை

யாழ்ப்பாணம், செப் 21

முக்கூட்டுப் படைகளின் தளபதி ஆனந்த சில்வா நேற்று யாழ்ப்பாணத்துக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

கடற்படைத் தளபதியாக இருந்த ஆனந்த சில்வா கடந்த வாரமே புதிய கூட்டுப்படைத் தளபதியாகப் பதவி ஏற்ருர்.

வடக்கு கிழக்கு பகுதிகளுக்கான விஜயத்தின் ஒரு பகுதியாக அவர் நேற்று யாழ்ப்பாணத்துக்கும் வந்திருந்தார்.

### யுத்த நிறுத்தம் இனிமேல் நீடிப்பு இல்லையாம்

புதுடில்லி, செப். 21

இந்திய அமைதிப்படையின் யுத்த நிறுத்தம் இம்மாதம் 25 ஆம் திகதிக்குப் பின்னர் எக்காரணம்கொண்டும் நீடிக்கப்படமாட்டாது.

நீடிப்பு பற்றி நேற்று முன்தினம் புதுடில்லியில் அறிவித்த அரசு அதிகாரி, மேற்கண்ட தகவலையும் அப்போது வெளியிட்டார். (ஓ-எ)

### மத்திய வங்கி பிரதி ஆளுநர்

மக்கள் வங்கியின் முன்னள் தலைவர் டாக்டர் எஸ் ரீ. ஜீ பெர்னண்டோ மத்திய வங்கியின் பிரதி ஆளுநராக நியமிக்கப்பட்டிருக்கிருர்.

முக்கிய வங்கிகள், மற்றும் நிதி நிறுவனங்களை மேற்பார்வை செய்யும் பொறுப்பு இவரிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. (ஓ-எ)

### ஜப்பானிய மன்னரின் உடல்நிலைமோசம்

ஜப்பானியச் சக்கரவர்த்தி ஹிரோஹிட்டாவின் உடல்நிலை ஆபத்தான கட்டத்தை அடைந்திருப்பதாக அறிவிக்கப்பட்டது.

87 வயதான அவர், உலகில் நீண்ட காலம் ஆட்சி நடத்தும் ஒரே ஒரு மன்னர் ஆவார். (ஓ-எ)

### புதுடில்லியில் நிலநடுக்கம்

புதுடில்லி, செப் 21

புதுடில்லியில் நேற்று மாலை சிறிய அளவில் நிலநடுக்கம் காணப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

நடுக்கத்தின் மையம் புதுடில்லியில் இருந்து 35 கிலோமீட்டர் தொலைவில் நிலை கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-எ)

## பூஸாவிலிருந்து நேற்று மேலும் 220 பேர் விடுதலை

கொழும்பு, செப் 21

பூஸா முகாமில் இருந்து மேலும் 220 பேர் நேற்று விடுவிக்கப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டது.

இவர்களில் 217பேரை ஏற்றிக்கொண்டு இந்தியக் கப்பலான மகேஸ்ரம் நேற்று திருகோணமலை நோக்கிப் புறப்பட்டது.

இக்கப்பல் இன்று திருகோணமலையை அடையும் என்று தெரிவிக்கப்பட்டது.

இவர்களை அமைதிப் படையினர் வரவேற்று உபசரிப்பர். பின்னர் அவரவரின் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவர்.

ஏனைய 3 பேரும் தாங்களாக திரும்பிச் செல்வதாகத் தெரிவித்தார்கள் (ஓ-எ)

### முச்சந்தி முரளி



எகிப்து சிறையில் எங்களின்ரை பெண்டுகளும் இருப்பினம் எண்டு சொல்லுங்கோ பின்னை...!

### தியாகி திலீபன் நினைவாக

## சுன்னுகம் வர்த்தகர் வெள்ளியன்று உண்ணுவிரதம்

### கடையடைப்பும் இடம்பெறும்

யாழ்ப்பாணம், செப் 21

தியாகி திலீபன் உயிர் நீத்த ஓராண்டு நினைவை முன்னிட்டு எதிர்வரும் வெள்ளிக்கிழமை சுன்னுகம்பகுதி வர்த்தகர்கள் உண்ணுவிரதம் அனுஷ்டிப்பர்.

இதற்கான ஏற்பாடுகளை சுன்னுகம் வர்த்தகர் சங்கம்செய்துள்ளது

சுன்னுகம் சந்தைக்கு முன்பாகவுள்ள விசேட பந்தலில் வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு உண்ணுவிரதம் ஆரம்பமாகும்.

காலை 8 மணிக்கு மங்கள விளக்கேற்றப்பட்டு தியாகி திலீபனின் உருவப்படமும் திரைநீக்கம் செய்யப்பட்டு உண்ணுவிரதம் ஆரம்பமாகும்.

அன்றையதினம் சுன்னுகத்தில் உள்ள கடைகள் அனைத்தும் மூடப்பட்டிருக்கும் எனவும், சுன்னுகம்வாழ் பொது மக்கள் அனைவரையும் உண்ணுவிரதத்தில் கலந்துகொள்ளுமாறும் சுன்னுகம் வர்த்தகர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதேவேளை திலீபன் தியாக நிலை அடைந்த நாளான 26-ஆம் திகதியும் சுன்னுகத்தில் கடையடைப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

திலீபனின் நினைவாக 26-ஆம் திகதி சுன்னுகம் கதிரமலைச் சிவன் கோவில், சுன்னுகம் ஐயனர் கோவில், சுன்னுகம் மத்திய சந்தைக் கட்டடம் ஆகியவற்றில் அன்னதானமும் வழங்கப்படவுள்ளது. (ஒ-10)

## நல்லூரில் நேற்று ஆருவது நாளாக உண்ணுவிரதம்

யாழ்ப்பாணம், செப். 21

தியாகி திலீபனின் ஓராண்டு நினைவாக நல்லூர் கந்தசுவாமி கோவிலின் முன்றலில் நடைபெற்று வரும் உண்ணுவிரதப்போராட்டத்தில் கலந்துகொள்வோரின் எண்ணிக்கை தினமும் அதிகரித்து வருகின்றது.

நேற்று - ஆருவது நாளாக - நடைபெற்ற உண்ணுவிரதத்தில் பெரும் எண்ணிக்கையிலான மாணவர்கள் உட்பட ஆயிரக் கணக்கானேர் கலந்துகொண்டனர்.

சென். ஜோன்ஸ் கல்லூரி, சன்மார்க்க வித்தியாலயம்,சென்.சாள்ஸ் மகா வித்தியாலயம், அச்சுவேலி மகா வித்தியாலயம், சென். மேரிஸ் வித்தியாலயம் (O L R.) பாடசாலை ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களும்-

தனியார் கல்வி நிலையங்களைச் சேர்ந்த மாணவர்களும்-

அரியாலை பூம்புகார் கிராமத்தைச் சேர்ந்த பொதுமக்களும் - மற்றும் அன்னையர் முன்னணியினரும் கலந்துகொண்டனர். (ஒ-க)

## யுத்த நிறுத்த நீடிப்புக் குறித்து இந்திய அரசாங்கம் அறிக்கை

யாழ்ப்பாணம், செப். 21

இந்திய அரசாங்கம் யுத்த நிறுத்த நீடிப்புக் குறித்து அறிக்கை ஒன்றை நேற்று வெளியிட்டது.

அதன் விவரம் வருமாறு:—

சகல தமிழ் அமைப்புக்களும் தேர்தலில் பங்கு கொள்ளும் பொருட்டு. இந்தியா, செப்டம்பர் 15-ஆம் திகதி ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தைப் பிரகடனப்படுத்தியது. ஏற்கனவே தெளிவுபடுத்தப்பட்டது போல, இப்போதைய யுத்த நிறுத்தம், தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட சகல தமிழ் அமைப்புக்களும் தேர்தலில் பங்கு கொள்வதற்கு சந்தர்ப்பம் அளிப்பதற்கென்று விசேடமாக ஏற்பாடு செய்யப்பட்டதாகும். அந்த நோக்கம் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு விட்டது.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் கீழ் தமிழ் மக்களின் குறிப்பான குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு, இலங்கை ஜனதிபதி ஏற்கனவே ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார். அத்தோடு அவற்றிற்கான செயற்பாடுகளும் ஆரம்பமாகி உள்ளன. ஜனநாயகச் செயற்பாட்டின் மூலமே மேலும் முன்னேற்றம் காணமுடியும். ஆகையால் தமிழர்களின் நீண்டகால நலனில் உண்மையாகவே அக்கறை உள்ள ஒவ்வொருவரும், தேர்தலில் பங்கு கொள்ள முன்வருவர் என்பது தெளிவானதாகும்.

யுத்த நிறுத்தத்தை நீடிக்க வேண்டும் என்ற கோரிக்கை, வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த பல பிரசைகளிடமிருந்து இந்திய அமைதிப் படைக்குக் கிடைத்தது

மேலதிக அவகாசம் தரப்பட்டால், தமிழீழ விடுதலைப் புலிகளை வன்செயலைக் கைவிடச் செய்து ஜனநாயக வழிக்கு வர இணங்கச் செய்யமுடியும் என

(8-ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Black & White T.V. சைக்கிள், தேக்கு அலுமாரி, நேசறி வாங்கு மேசை, ஹோல் செற் உடன் விற்பனைக்குண்டு. 120, இராசாவின் தோட்டம் றோட், யாழ்ப்பாணம். (6712)

### விற்பனையாகின்றது புதியவெளியீடுகள்

அழகியற் கல்வி - குழந்தைகளுக்கான இன்பத் தமிழ்ப் பாடல்கள் ஆண்டு 1&4, விலை ரூபா -15, புதிய சமூகக்கல்வி பாடப் பொழிப்பும் தொழிற்பாடும் பயிற்சிகளும், ஆண்டு 6- விலை ரூபா15 ஆண்டு7 ரூபா 25, கிடைக்குமிடம் ஞானசுரபி புத்தகக் கம்பனி, யாழ்ப்பாணம். (6532)

### இலத்திரனியல் ஆண்டு—11

விஞ்ஞான ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் உதவும் வகையில் விளக்கங்களுடன் உள்ளடங்கிய மேற்படி புத்தகம் பூபாலசிங்கம் புத்தகசாலையில் விற்பனையாகின்றது. (6693)

### இறைச்சிக் கோழிகள்

Broiler இறைச்சிக் கோழிகள், பேட்டுக் கோழிகள், சேவற் கோழிகள், சூப் குஞ்சுகள், விருத்துக் குஞ்சுகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு Nallur Farm Centre, C/o Nallur வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். (6144)

### திருமண அழைப்பிதழ் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்த நாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேட கழிவுடன்) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C124)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Nallur Farm Centre Prima Lohmann வெள்ளைசிவப்பு பேட்டுக் குஞ்சுகள், சிவப்பு சேவல் குஞ்சுகள், Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள், Hyline கறுப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன் கிழமையிலும் விநியோகிக்கப்படும். உடன் முன்கூட்டியே பதிவுசெய்யவும். தொடர்பு: நல்லூர் பாம் சென்ரர், C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர்லேன், நல்லூர். (6143)

## கல்வி

### ALஇரசாயனம்

Brown Road, A/L 89 இரசாயனம் ஆசிரியர் சந்திஸ். ஒரு வருட வகுப்புக்கள் பிரிவு I திங், செவ், புதன், வியா, வெள்ளி சேதன இரசாயனம். ஆரம்பம்: (20 - 9 - 88) செவ். 4.30P m. (செவ், வியா. 4.30 p m) பௌதி இரசாயனம். ஆரம்பம்:(23 - 9 -88) வெள்ளி 4 30 p.m பிரிவு II ஆரம்பம்:24-9-88சனி4 30p.m (சனி, ஞாயிறு 4.30-6.30 pm) முழுப்பாடத்திட்டமும் வினா விடைகளும் செய்யப்படும். (6530)

## தேவை

யாழ் மாநகரசபை எல்லைக்குள் சுண்டிக்குளி, அரியாலைப் பகுதிகளில் வீடு கட்டக்கூடிய காணி தேவை. விபரம்:-J.P.T Ltd 3, நவீன சந்தை, (மேல்மாடி) யாழ்ப்பாணம். (6545)

கொழும்பில் தலைமை நிலையத்தைக் கொண்ட பிஸ்கட் கம்பனிக்கு யாழ்ப்பாணத்தில் பிஸ்கட் பைக்கிங் செய்வதற்கு அனுபவமுள்ள பெண்பிள்ளைகள் தேவை. உடன்வரவும். (9 a. m- 4. p. m) யாழ்நகர வாசிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தொடர்பு; 144/2 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (6541)

சோடா (Aerated Water) அடைக்கும் இயந்திரம் கைவசம் உள்ளவர்கள் எம்முடன் உடன் தொடர்பு கொள்க. சமூக அபிவிருத்திச்சபை 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (C/ 239)

பகுதிநேர வேலைக்கு உதவி வைத்திய அதிகாரி (R M P யும்) முழுநேர மருந்துக் கலவையாளரும் தேவைப்படுகிறார்கள். இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். தொடர்பு:- வைத்திய நிலையம், ஆனைக் கோட்டை. (6543)

### இருப்பிட வசதி

யாழ்/ இந்து மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் சகல வசதிகளுடன் (சாப்பாட்டுடன்) பெண்பிள்ளைகளுக்கு இருப்பிட வசதி உண்டு. 30. 9. 88 க்கு முன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: 211, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (6704)

### சோதிட மாந்திரீக நிபுணர்

நினைத்த காரியம், ஜாதகபலன், விவாகப் பொருத்தம், எண்சோதிடம், தொழில் விருத்தி, மங்கள மணவாழ்வு, மனையில் இலட்சுமி கடாட்சம், சத்துருஜெயம், கிரகதோஷம் முதலான யந்திர விடயங்கட்கு நாடுங்கள் "சக்தி சரவணா" (அரச அங்கீகாரம் பெற்ற சோதிடம், மட்டக்களப்புபாரம்பரிய பரம்பரை மாந்திரீக நிபுணரும்) 210, கஸ்தூரியார் வீதி, (யாழ்/ இந்துக்கல்லூரி மைதானத்திற்கு முன்பாக) யாழ்ப்பாணம். (6510)

### கண்டெடுக்கப்பட்டது

17- 9– 88 சனிக்கிழமை மாலை 4. 30 மணிக்கு புளுப்பொறுக்கி ஆலடி வீதியில் ஒருதொகைப் பணம் கண்டெடுக்கப்பட்டது. உரியவர் தருந்த அத்தாட்சியுடன் இல: 750, மினிபஸ் உரிமையாளர் சுலோசநாதன், உடுப்பிட்டி என்பவரிடம் பெற்றுக்கொள்ளலாம். (6546)

### மணமகன் தேவை

யாழ் இந்து கரையாரின ஆசிரியைக்கு 38 வயதுக்குட்பட்ட மணமகன் தேவை. குருகுலமல்லாதோரும் விண்ணப்பிக்கலாம். மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். (6707)

யாழ்ப்பாண வேளாளகத்தோலிக்க ஆசிரியைக்கு 28—35 வயதுக்கு இடைப்பட்ட நல்ல உத்தியோகத்திலுள்ள மணமகன் தேவை. Town இல் வீடு, வளவு பணம் தரப்படும். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (6708)

### மணப்பெண் தேவை

யாழ்ப்பாண இந்து வேளாள செவ்வாய்க் குற்றம் மிகக்கூடிய எக்கவுண்டனுக்கு 32 வயதுக்கு உட்பட்ட கொழும்பில் வீடு, பணம் தரக்கூடிய மணப்பெண் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். (6706)

### மணமக்கள் தேவை

சைவ வேளாள பயிற்றப்பட்ட சங்கீத உதவி ஆசிரியை 25 வயது விவாகரத்துப் பெற்றவர். இவருக்கு தாரமிழந்தவர், விவாகரத்துப் பெற்றவரும் விண்ணப்பிக்கலாம். விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர் சகோதரனுடன் 28வயது மாற்றுத் திருமணத்திற்கும் இடமுண்டு. வடமராட்சிப் பகுதி விரும்பத்தக்கது. No; 368, C/o உதயன், யாழ்ப்பாணம். (6544)

உயர் வேளாளகுலம், சைவபோசனம். லண்டனிலுள்ள, 31 வயது கணக்காளனுக்கு லண்டனிலுள்ள அல்லது அங்கு போகக்கூடிய அழகான மணப்பெண் தேவை. இலங்கை அரசாங்கத்தில் கௌரவமான உத்தியோகத்திலுள்ள 32வயதுப் பெண்ணுக்கு சமமான அந்தஸ்திலுள்ள மணமகன் தேவை. இருவருக்கும் அற்ப செவ்வாய்க்குற்றம் உண்டு. சீதனம் பேசித் தீர்த்துக் கொள்ளலாம். 194C/o உதயன், யாழ்ப்பாணம். (6691)

## சேவை

உங்கள் எண்ணம் போல் கண்கவர் நிறங்களில் பற்பல டிசைன்களில் உத்தரவாதத்துடன் சிறந்த முறையில் ரெராசோ புளோரிங் (Terraso Flooring) (மாபிள் நிலம்) அமைத்துக் கொடுக்கப்படும். சதுர அடி 30 — 36 வரை தொடர்பு: N.P. லோகேஸ்வரன், No. 33 முத்த விநாயகர் 1 ஆம் ஒழுங்கை, சச்சேரி நல்லூர் வீதி, நல்லூர். (6151)

## காணவில்லை

கந்தையா யோகேஸ்வரன் No.44A, ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு - 13 ஆகிய எனது அடையாள அட்டை (இல- 592440474V) 15. 9. 88அன்று யாழ் பஸ்தரிப்பு நிலையத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பரிஸ் மாட்ஸ், 155, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும் (6547)

செல்வி ஞானமணி கந்தையா என்பவராகிய எனது அடையாள அட்டை இல: 377611705V நல்லூர்-யாழ் மினிபஸ்ஸில் பயணம் செய்யும்போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன். (6548)

### அரைச்சலார்

31- 10- 88 வரை விசேட சலுகை, உங்கள் குளிர் சாதனப் பெட்டிகளை ரூபா 600/- மாத்திரம் செலுத்தி ஒரு வருட உத்தரவாதத்துடன் Gas. நிரப்பிக் கொள்ளுங்கள். Omega, Manipay Road, Jaffna. (6549)

## செயற்குழு கூடுகிறது

சுன்னாகம், செப் 21 சுன்னாகம் பிரஜைகள் குழுவின் செயற்குழு இன்று புதன் கிழமை கூடுகிறது.

இன்றைய கூட்டத்தில் பல முக்கிய விடயங்கள் ஆராயப்படவுள்ளதாகவும் அதி முக்கிய சில முடிவுகள் எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-27)

## 6ஆம் மாதம் முதலாம் ஆண்டு நினைவஞ்சலிகள்



தங்கத்துரை சிதம்பரப்பிள்ளை (Radio Officer)

தோற்றம்: 2 - 02 - 1955
மறைவு: 27 - 03 - 1988



தங்கயோகன் சிதம்பரப்பிள்ளை (Saudi Maintenance- Corporation Supervisor)

2 - 06 - 1958
20 - 08 - 1987

எத்தனையாண்டு கழிந்தாலும் உங்கள் பிரிவு நினைவலைகள்
பேராறாய்ப் பெருக்கெடுத்து வற்றாத நீராக
அலைமோதி நிறை நெஞ்சம் குளிர்விக்கும்
நின்னுருவங்களின் நிழல் நெஞ்சம் என்றும் நீங்காதே!
உங்கள் பிரிவை ஆற்றாது தவிக்கும்:
அம்மா, சகோதரங்கள்

(6709)

## விற்பனைக்கு
### சுகாதார சேவையாளரின் கைநூல் (தமிழ்)

சமூக மருத்துவத் தொண்டர்கள், ஊழியர்கள், தாதியர், சுகாதாரம் பயிலும் உயர் நிலை மாணவர்கள் மற்றும் ஒவ்வொரு குடும்பத்தவருக்கும் பயன்படக் கூடியது.

**Dr. வே. கிருஷ்ணராஜா F. R. C. S.** அவர்களால் எழுதப்பட்டது.

**விலை ரூபா 58. 00**

கிடைக்குமிடம்:

**அகதிகள் புனர் வாழ்வு நிறுவனம் T. R. R. O**
106, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (C-78)

## அறிவித்தல்

நீராவியடியில் 28 (91) கல்லூரி வீதியில் அரைக்கும் ஆலை அமைந்துள்ள காணியும் வீடும் கடையும் நீராவி வீரகத்தி விநாயகர் ஆலயத்திற்குச் சொந்தமானவை.

குறித்த காணியையோ வீட்டையோ கடையையோ எவ்வகையிலும் வேறெவருக்கும் பராதீனப்படுத்த ஆலை உரிமையாளருக்கு உரிமை இல்லை. குறித்த காணி, வீடு கடை அல்லது இவற்றில் ஏதேனும் ஒன்று சம்பந்தமாகப் பிறருடன் ஏதேனும் ஒப்பந்தம் செய்யப்படின் அவை எம்மைக் கட்டுப்படுத்தாததுடன் செல்லுபடியற்றனவுமாகுமென இத்தால் அறியத்தருகிறேன்.

வை. இரகுநாத முதலியார்
தருமகர்த்தா
நீராவி வீரகத்தி விநாயகர் ஆலயம்.
(6705)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

மருத்துவ பீடம்

## ஆரம்ப கிளினிக்கல் பயிற்சி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட 1985 ஆம் ஆண்டுக்கான ஆரம்ப கிளினிக்கல் பயிற்சி ஒக்ரோபர் மாதம் 3 ஆம் திகதி ஆரம்பமாகும். மாணவர்கள் மருத்துவ பீடாதிபதி முன் சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

– பதில் பதிவாளர் –

(C/246)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



இணுவில்
மாரிமுத்து கணேசு

தோற்றம்: 20- 11- 1940
:மறைவு 12- 10 -1987

அன்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய் எங்கள் ஒளிவிளக்காய் எம்மை எல்லாம் வழிநடத்திய எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்!

அன்பு மனைவி, பிள்ளைகள்
உறவினர்கள்.

இணுவில் கிழக்கு.

(6577)

### 1450 பால்மா பைக்கெட்

மாங்குளம் செப் 21 யாழ்ப்பாணம் அகதிகள் புனர்வாழ்வு கழகம் முல்லைத்தீவில் பாதிக்கப்பட்ட மக்களுக்குரூபா 50ஆயிரம்பெறுமதியான 1450 பால்மா பைக்கெட்டுகளை முல்லைத்தீவு மேலதிக அரசாங்க அதிபர் திரு. சண்முகலிங்கம் [illegible] மாங்குளத்திலிருந்து முல்லைத்தீவுக்கு [illegible] (இ-94)

## ஷெல்டனின் இடத்துக்கு யார்?

யாழ்ப்பாணம், செப். 21

வடக்கு -கிழக்கு மாகாணசபை ஆளுநர் பதவிக்கு பிரதி அமைச்சர் திரு. ஷெல்ரன் ரணராஜா நியமனம் பெற்றுள்ளதை அடுத்து அவர் செங்கடகல நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்வார் என அறிய வருகின்றது.

காலியாக இருக்கும் அவ்விடத்திற்கு அவரது பாரியார் நியமனம் செய்யப்படலாம் எனக் கூறப்படுகிறது.

இவர் தற்போது கண்டி மாநகரசபை பிரதி முதல்வர் என்பதுகுறிப்பிடத்தக்கது. (ச-21)

## எமது நேற்றைய புதிய வெளியீடுகள்

(1) அர்ஜுன் ✶ ஷோபனா
"நான் தான் ராஜா"
[ORIGINAL]

(2) சத்தியராஜ் ✶ அமலா
"ஜீவா"
[PYRAMID ORIGINAL]

(3) Best of இளையராஜா VOL - IV

(4) நாகேஷின் நகைச் சுவைத் தொகுப்பு

**குணம் வீடியோ சென்ரர்**
42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். C/247

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



கொக்குவில் மேற்கு
சின்னையா செல்லத்துரை

தோற்றம்: 13—05—1913
மறைவு; 02—10—1987
திதி: 21—09—1988

எங்களை அன்போடும் பாசத்தோடும் வளர்த்து வேண்டிய நேரத்தில் வேண்டியயாவும் உகந்தளித்த அன்புத்தெய்வமே! குடும்பவிளக்சே!! உங்களைப் பிரிந்து ஓராண்டு கழியினும் எங்கள் துயரத்தை ஆற்ற முடியாமல் தவிக்கின்றோமே!!!

உங்கள் ஆத்மா சாந்தியடையப்பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவில் வாழும்:
அன்பு மகன், மருமகன்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்,
நண்பர்கள்.
( 6581 )

## 89 A/L விஞ்ஞான மாணவர்கட்கு
### கணத்தாக்கு மொத்தல்

SAT & SUN & MON 6.15 am THUR 4.30 — 6.00 p m
**ஆரம்பம் 22-09-1988**

தொசையீடு:- TUE & THU & FRI—6-15 — 7.45
**ஆரம்பம்:- 27-09-1988**

ஆசிரியர்:- **Mr. கணேசன் B. sc. (Hons)**
3-ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். C/249

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்குக்கு நேரடி வெளிநாட்டு உதவி தேவை

## மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் கூறுகிறார்

காங்கேசன்துறை, செப் 21

''ஈழத்தமிழ் மக்களின் இன்னல்களுக்குத் தீர்வு காண மேற்கொள்ளப்படும் ஒப்பந்தத்தில், வெளிநாட்டு உதவிகள் நேரடியாக வடக்கு — கிழக்குப் பகுதிகளுக்குக் கிடைக்கத்தக்க வகையில் ஓர் அம்சம் முக்கியமாக இடம்பெற வேண்டும். அப்படியில்லாத ஒப்பந்தத்தால் தமிழ் மக்களுக்குவிடிவு இல்லை''

இப்படிக் கூறுகிறார் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. அ. ஸ்ரீபாஸ்கரன்.

மேற்கு ஜெர்மனியில் உள்ள ஒரு நிறுவனம் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு விவசாய உபகரணங்களை வழங்கியிருந்தது.

இந்த உபகரணங்களில் ஒரு பகுதி பளை - கூத்தியவத்தை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் 92 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

வீமன்காமம் மகாவித்தியாலயத்தில் சங்கத்தின் தலைவர் திரு. மு. சின்னத்துரை தலைமையில் நடந்த இவ்விழாவில் திரு. ஸ்ரீபாஸ்கரன் மேலும் பேசுகையில்கூறியதாவது:

''வெளிநாட்டு உதவிகள் தாராளமாகக் கிடைக்கும். கிடைத்துக்கொண்டிருக்கின்றன. ஆனால் இலங்கை அரசு இந்த உதவிகளுக்கு ஒத்துழையாமையாக இருந்து வருகிறது

இதுவரை மல்லாகம் பகுதிக்கு 25 லட்சம்ரூபா உதவிகள் கிடைத்துள்ளன வடக்கு - கிழக்கு பகுதிகளில் உள்ள வைத்தியசாலைகளுக்கு 45 லட்சம் ரூபா பெறுமதியான பற்சிகிச்சை உபகரணங்கள் வெளிநாட்டில் இருந்து கிடைத்தன.

மேலும் பல அபிவிருத்தித் திட்டங்களைத்திட்டி வெளிநாட்டு உதவிகள் மூலம் நடைமுறைப் படுத்தலாம். ஆனால் இலங்கை அரசு இதற்கு தடையாக உள்ளது.

எம் பிரச்சினைக்கு தீர்வு ஏற்படும் பட்சத்தில் வெளிநாட்டு உதவிகள் நேரடியாக எமக்குக் கிடைக்க வகை செய்ய வேண்டும் என்று போராளிகளிடமும், இந்திய அரசிடமும் கூறியுள்ளேன்.

வெளிநாட்டு உதவிகள் இல்லாமல் நாம் முன்னேற முடியாது. ஆகவே சகல தரப்பும் இணைந்து வெளிநாட்டு உதவிகள் நேரடியாக எமக்கு கிடைக்க உதவ வேண்டியதவசியம்.

இப்படி அவர் கூறினார்.

வலிவடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. வை. இராசையா பேசுகையில்; 'எம் சமுதாயத்தை முன்னேற்றக் கூடியவர்கள் எம் விவசாயிகள் தான். அவர்கள் கையில்தான் நாம் தங்கியிருக்கிறோம். இன்று பெறும் உபகரணங்களை கொண்டு நாட்டை முன்னேற்ற விவசாயிகள் முன்வரவேண்டும்—என்றார்.

யாழ். மாவட்டகிராம அபிவிருத்தி அதிகாரி திரு. எஸ். சிவரத்தினம் ஆசிரியர் கு. நடேச பிள்ளை உட்படப் பலர் உரையாற்றினார்கள்.

சங்கச் செயலாளர் எஸ்./ ஆர். ஞானசுந்தரம் நன்றிகூறினார்.

(இ-68)

## பாலர் பராமரிப்புப் பாடசாலை

கோப்பாய், செப் 21

கோப்பாய்ப் பகுதியில் வசிக்கும் தாய், தந்தையரை இழந்த, சிறுவர்களுக்குக் கல்வி புகட்டவும், உணவு, உடை என்பவற்றை வழங்குவதற்கும் நாம் பாலர் பராமரிப்புப் பாடசாலை ஒன்றை நடத்த உள்ளோம் இதற்காக வெளிநாட்டுப் புனர் வாழ்வு அபிவிருத்தி நிறுவனங்களின்உதவியையும் நாடி உள்ளோம்

கோப்பாய் மக்களின் நலன் காக்கும் பிரிவின் செயலாளர் கா. கணேசலிங்கம் கோப்பாய் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற கோப்பாய் மக்கள்நலன் காக்கும்பிரிவின் பொதுச்சபைக் கூட்டத்திற் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

அவர்மேலும் பேசுகையில் நாம் ''நெருட்''நிறுவனத்திடம் நிதி உதவி கோரியுள்ளோம் அவர்கள் 50 ஆயிரம் ரூபா வழங்குவதற்குஒப்புக்கொண்டுள்ளனர். அப்பணம் கிடைத்ததும், அண்மைய சம்பவங்களின் போது இறந்தவர்களின் குடும்பங்களுக்கு தலாஇரண்டாயிரம்ரூபா வழங்கப்படும் என்றார்.

தலைவர் செல்வரத்தினம்தமதுஉரையில்; நாம் பல நிறுவனங்களிடம் உதவி கோரியுள்ளோம். விரைவில் கோப்பாய் வடக்குப் பகுதியில் எரியுண்டவீடுகளுக்கு மனித உரிமை சங்கத்தின் மூலம் நிவாரணம் கிடைக்கவுள்ளது என்றார்

கூட்ட முடிவில் யோசப் ரட்ணராஜா, சபாலிங்கம், உட்பட ஐவரை உள்ளடக்கிய பொதுக்குழு ஒன்று தெரிவுசெய்யப்பட்டுமாட்டுப்பண்ணை அமைக்கும் முயற்சியில் ஆலோசனை தெரிவிக்குமாறு பணிக்கப்பட்டது.

(-72)

## சமய அறிவுப் போட்டி முடிவு

யாழ்ப்பாணம், செப், 21

யாழ் மாநகர சபை நடத்திய சமய அறிவுப் போட்டி (1988)யில் சித்தியடைந்தோர்:

### மேற் பிரிவு

(1) இ. ஜெயரஞ்சினி (மகாஜனக் கல்லூரி) (2) ந. நவதர்ஷினி (மகாஜனக்கல்லூரி) (3) ச. கமலினி (மகாஜனக்கல்லூரி) (4) இ. தர்ஷினி (நல்லூர்) (5) இ. யசோதினி (மகாஜனக்கல்லூரி)

### மத்திய பிரிவு

(1) சி. சம்ஷானந்தி (திருநெல்வேலி) (2) ஜீ. சிவரஞ்சினி (கொல்லங்கலட்டி) (3) மா. நிமலதீபன் (யாழ்ப்பாணம்) (4) கே. சித்திரா (கந்தர்மடம்) (5) சி. நிஷானந்தி (திருநெல்வேலி) (6) பா. சாயிஜெனனி பிரசாந்தி (கொக்குவில்)

### கீழ்ப்பிரிவு

(1) இ. சுகிர்தா (கொல்லங்கலட்டி) (2) ப. நிரஞ்சினி (கீரிமலை) (3) குதுஷ்யந்த (பிறவுண் வீதி) (4) ச. கௌசிதகி (தெல்லிப்பளை) (5) ந. தமயந்தி (தெல்லிப்பளை) (ஓ)

## "வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்துதல் சமுதாயத்தின் கட்டாயக் கடமையாகும்"

பண்டத்தரிப்பு, செப். 21

மக்களிடையேயும் மாணவரிடையேயும் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்துதல்சமுதாயத்தின் கட்டாயக் கடமை. வாசிப்பு ஒரு மனிதனை பூரண மனிதனாக்கும்.

இவ்வாறு வட்டுக்கோட்டை சுப்பிரமணிய வித்தியாலய அதிபர் திரு. வ. யோகானந்தசிவம் வட்டுக்கோட்டை இந்து இளைஞர் கலாசாரமன்றம், அமரர் பரமானந்தசிவம் ஞாபகார்த்த நூல் நிலையத்தின் ஒன்பதாவது ஆண்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

மன்றத் தலைவர் திரு த. அருணகிரிநாதன் தலைமையில் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. மங்கள விளக்கை திரு வே. முத்துத்தம்பி ஏற்ற, திரு என் ஐயாத்துரை மன்றக்கொடியைப் பறக்கவிட்டு விழாவைத் தொடக்கி வைத்தனர்.

திரு யோகானந்தசிவம் தொடர்ந்து உரையாற்றுகையில்; சிறந்த சமூகசேவகரும் நல்லாசிரியருமாகத் திகழ்ந்த அமரர் பரமானந்தசிவத்தின் ஞாபகார்த்தமாக வட்டு இந்து இளைஞர் கலாசார மன்றம் அமைந்த நூல்நிலையம்உண்மையில் அளப்பரிய சேவையும் பயனும் மிக்கதாகத் திகழுகின்றது என்றார்.

கல்லூரி அதிபர் திரு. வி. ஏகாம்பரமூர்த்தி, திரு. க. நாகப்பு, திரு ச. சின்னப்பாப்பிள்ளை, திரு வ. பரமேஸ்வரன், திரு. சி சிவனந்தம் ஆகியவர்களு . வேறு பலரும் உரையாற்றினர். (ஓ- 120)

## கைநூல் வெளியீடு

மண்டைதீவுதிருவெண்காடு சித்தி விநாயகர் ஆலய சங்காபிஷேக தினத்தன்று ''சுந்தரமூர்த்தி நாயனார் திருமுறை அமுதம்'' என்ற கைநூல் வெளியீட்டு விழா மண்டைதீவு சைவ வளர்ச்சிக்கழகத்தலைவர் திரு. ச. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது. (ச)

## பிறந்த நாள் வாழ்த்து

### செல்வன்

### ஜெ. மணிமாறன் (ஜெகன்)

ஜெயபாலன் புஷ்பமலர் தம்பதிகளின் செல்வப் புதல்வன் மணிமாறன் (ஜெகன்) தனது பிறந்த தினத்தை 21-9-88 அன்று புதன் கிழமை கொடிகாமத்தில் தனது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அம்மம்மா, அம்மப்பா, சுவிஸ் ஆசைமாமா, பாஸ்கரன் மாமா, பெரியப்பா, பெரியம்மா, வசந்தி, அத்தை, மாமா, மச்சான், மனோச் சித்தப்பா, சந்திரன் சித்தப்பா, குட்டிச்சித்தப்பா, புத்தூர்சந்தி, மாமா, மாமி, மச்சாள்மார், மச்சான்மார், பளை அம்மப்பா, அம்மம்மா, மாமிமார், கீதா அக்கா, சுதா அக்கா, குமார் அண்ணா, றஞ்சன் அண்ணா, மதி அண்ணா, மங்களேஸ்வரன் அண்ணா, அனைவரும் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

(6575)

## யாழ். பல்கலைக்கழக வணிகமாணி பரீட்சை-பகுதி III: சித்தியடைந்தோர்

யாழ்ப்பாணம், செப் 21

யாழ் பல்கலைக்கழக வணிகமாணி பரீட்சைப் பகுதி III (1987) இல் சித்தியடைந்தோர் வருமாறு:-

எஸ் எம். அப்துல் நஜீப், எம். ஜே. முகமட் அஸ்மி, ஜி. பாலாம்பிகை, எஸ் பாலராஜா, ஏ. என், கார்த்திசேயன், செல்வி. ரி தேவிப்பிரசாதம் செல்வி எம் ஈ பி. டொமினி, செல்வி எஸ். ஏ. பெலிஜியா, ரி. கணேஷ், என். கீதா, ரி குணநேசன், எஸ் இந்திராணி. என். இந்திரவதி. ஏ பி ஸ்சமூன், கே. ஜெகதீஸ்வரன்,

செல்வி பி எம். ஜோசப். ஜே ஜுட் றெபி, இ கமலகுமாரி, பி கமலலோஜினி, ரி. கமலவேணி, கே. மங்கலேஸ்வரன், ஜே. மோகன்,

யூ. எல். எம். ஜவார், [illegible] ப் நிவாத் ஏ. ஆர் முகமட் நிசம். எம் ஐ முகமட்மன்சூர் எம் ஏ முகமட் றாமி; ஐ எல் எம் ஜலால்டீன், கே. மோகனராஜா, கே. மோகனரஞ்சினி,

சி. நியூ ற்ற ஜே நார்சூக், கே. பரமநாதன், எஸ் பரிமளாதேவி கே. பூரேந்திரன், எஸ். சி. பிரேமிளா, ஆர். ரி. இராஜமித்திரன், செல்வி ஆர். பூபாலபிள்ளை, செல்வி என். ராதமணி, செல்வி என். றாபிகா, கே. சந்தனம், ரி. சத்தியபாலன், என். சரோஜினிதேவி எம். சி. செரமன, ரி. சண்முகநாதன், கே. சிரோன்மணி,

எம். ஐ. எஸ் நிகரா ஏ. சியாறு செல்வி ஆர். சிவயோகம், எஸ். இராஜநாயகம், கே. ஸ்ரீஸ்கந்தகுமார், என். தவராணி. எஸ். தெய்வராணி,

செல்வி டி. என். தியாகராசா, எஸ். திருமுருகா. கே. வசந்தினி, ஐ எல், தலுக், ஏ. யோகேஸ்வரன், எம். விக்னேஸ்வரன், ஆர். இராஜ்குமார்,

ஐ அரசரத்தினம், எஸ் ஞானசேகரன், செல்வி ஆர். ஓ. டி. மடோனு, பி. மகேந்திரன், என். முரளி கிருஷ்ணன், எம். யூ. எம். ரூமி, பி. டி. சி. சின்னையா'

நூன சித்தி

எஸ். குமார், ரி. விமலேஸ்வரன், (ஓ-5)

## சுகாதார நடவடிக்கைகளில் மக்களின் ஒத்துழைப்பு அவசியம்

சுன்னாகம், செப்.21

ஓர் இனத்தின் வாழ்க்கைத்தராதரம் அதன் மக்களின்சுகாதார நிலையிலேயே தங்கியுள்ளது. சுகாதார நடவடிக்கைகள் யாவற்றிலும் மக்களின் ஒத்துழைப்பும், பங்களிப்பும் அவசியமாகியுள்ளன.

இந்தவகையில் எமது பிரதேசமக்களின் சுகாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் சுகாதார, கல்வி, சுகாதாரத்துடன் இணைந்த திணைக்களங்கள் மற்றும் தொண்டர் நிறுவனங்கள் ஒன்றிணைந்து ஒத்துழைப்பையும், பங்களிப்பையும் வழங்குவது அவசியம்.

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி கலாநிதி இ. தெய்வேந்திரன் குரும்பசிட்டி சன்மார்க்கசபை மண்டபத்தில் சன்மார்க்கசபைத் தலைவர் கலாகேசரி ஆ. தம்பித்துரை தலைமையில் நடைபெற்ற சுகாதாரக் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் தமது உரையில்,

இன்று எமது பகுதிகளில் ஏற்படும் பெரும்பாலான நோய்களைச் சுகாதார வாழ்க்கை முறைகளைப் பேணுவதனல் அகற்றிவிடலாம்.

ஒவ்வொரு தனிநபரும் தனதுசுகாதாரத்திற்கும் தனது குடும்பத்தின் சுகாதாரத்திற்கும் பொறுப்பாக இருத்தல் வேண்டும் என்றார்.

சுகாதாரக் கல்வியதிகாரி திரு. கா. வைத்தீஸ்வரன், மல்லாகம் கிராம அபிவிருத்திச்சங்கத் தலைவர் திரு.சு.ஸ்ரீபாஸ்கரன் சுகாதாரப் போதனசிரியை திருமதி த. துரைசிங்கம்; யாழ் மாவட்ட றெட்பானு இணைப்பதிகாரி திரு. எஸ். சோதிராசா, பொதுசௌக்கிய பரிசோதகர் திரு. பொ. காசிநாதன் ஆகியோரும் உரையாற்றினர்.(ஓ-27)

## தான் கொண்ட இலட்சியத்துக்காக அண்ணல் காந்தி அடியோற்றி தன்னுயிர் ஈந்த

# தியாகத் தீபம் திலீபனுக்கு அஞ்சலி



"மக்கள் புரட்சி வெடிக்கட்டும் தமிழீழம் மலரட்டும்"- திலீபன் மரணப் படுக்கையில் இருந்து மக்களுக்கு விடுத்த கடைசிச் செய்தி.

-தமிழீழ மக்கள் சார்பில்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஈழத் திருமண்ணின் இணையற்ற தியாக மாமலை ★ திலீபனுக்கு ★ ஓராண்டு கண்ணீர் அஞ்சலி!



தரணியில் அவதரித்தல்: 29 - 11 - 1963

தன்னுயிர் நீத்தது: 26 - 9 - 1987

**கொண்ட இலட்சயத்திற்காக தன்னுயிர் ஈந்த திலீபனின் தியாகப் புகழ் வையகம் நிலைக்கும்வரை நீடித்து மணக்கட்டும் அவன் தியாகம் வாழ்க! புகழ் வாழ்க!!**

ஊர்காவற்றுறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
ஊர்காவற்றுறை.

## தியாகி திலீபன் நினைவுதினத்தையொட்டி உண்ணாவிரதங்கள் அஞ்சலிக்கூட்டங்கள்

யாழ்ப்பாணம், செப் 21

தியாகி திலீபனின் நினைவு தினத்தையொட்டி யாழ்ப்பாணத்தில் பல பாகங்களில் உண்ணாவிரதம், கூட்டுப் பிரார்த்தனை, அன்னதானம், அஞ்சலிக் கூட்டங்கள் ஆகியன நடைபெற்று வருகின்றன.

**தீவுப் பகுதியில்**

வேலணையிலுள்ள தீவுப்பகுதி தெற்கு பிரசைகள் குழு காரியாலயத்தில் பொது மக்களும் பொது நல அமைப்புகளும் கலந்து கொள்ளும் அஞ்சலிக் கூட்டம் 24 ஆம் திகதி சனிக்கிழமை காலை பத்து மணிக்கு நடைபெறும்.

அல்லைப்பிட்டியிலும் புங்குடுதீவிலும் வழிபாட்டுத் தலங்களில் பிரார்த்தனையும் உண்ணாவிரதமும் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன.

**காரைநகரில்**

காரைநகர் பிரசைகள் குழுவின்ஏற்பாட்டின்படி மணற்காட்டு முத்துமாரி அம்மன் கோயிலில் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. கடைகள் அனைத்தும் ஒரு கதவில் மட்டும் திறந்து வியாபாரம் செய்யப்படுறது. (ச-73)

**சுன்னாகத்தில்**

தியாகி திலீபனின் நினைவாக 26 ஆம் திகதி திங்கட்கிழமை சுன்னாகத்தில் அன்னதானமும் சுன்னாகம் பஸ் நிலையத்தில் நினைவு அஞ்சலிக் கூட்டமும் சுன்னாகம் வர்த்தகர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (ச-27)

**நெடுந்தீவில்**

நெடுந்தீவில் முக்கிய இடங்களில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்டுள்ளன. மாணவர்கள் பாடசாலைக்கு கறுப்புப் பட்டி அணிந்து செல்கின்றனர்.

இந்து கத்தோலிக்க ஆலயங்களில் பிரார்த்தனைகள் நடைபெறுகின்றன. (ச-111)

**சிறுப்பிட்டியில்**

சிறுபபிட்டி பிரஜைகள் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் ஜன சக்தி வாசிகசாலையில் உண்ணாவிரதமும் திலீபனின் நினைவு தூபிக்கான அத்திவாரமும் இடப்படும். (ச)

**புன்னாலைக்கட்டுவனில்**

புன்னாலைக்கட்டுவன் பிரசைகள் குழுவின் ஏற்பாட்டில் புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை முன்றலில் உண்ணாவிரதமும் கூட்டுப் பிரார்த்தனையும் நடைபெற்று வருகின்றன. (ச)

**பளையில்**

பச்சிலைப்பள்ளி பிரசைகள் குழுவும் அன்னையர் முன்னணியும் இணைந்து திலீபனின் நினைவாக ரூபா 20,000 செலவில் பளை மகாவித்தியாலய வளவில் நினைவு மண்டபத்துக்கான அடிக்கல்லை இம்மாதம் 25ஆம் திகதி நடுவர். (ரி)

**தென்கராட்சியில்**

பச்சிலைப்பள்ளி தென்மராட்சி ஆகிய இடங்களில் உள்ள சந்திகளில் திலீபனின் உருவப் படங்கள் வைக்கப்பட்டு தீபங்கள் ஏற்றப்பட்டுள்ளன. (ச-144)

**காங்கேசன்துறையில்**

காங்கேசன்துறை பிரசைகள்குழு தியாகி திலீபனின் தியாகத்தை நினைவு கூரும் முகமாக காங்கேசன்துறை மக்களை துக்கம் அனுஷ்டிக்குமாறும் வியாபார நிலையங்களில் கறுப்புக்கொடி பறக்க விடுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ச)

**சோண்டாவிலில்**

தியாகி திலீபனின் நினைவாக சோண்டாவில் கிழக்குச் சந்திக்கருகாமையில் பஸ்தரிப்பு நிலையம் ஒன்று அமைப்பதென்றும் திலீபனின் பெயரில் கோவில் வீதி ஒன்று திறப்பதென்றும் சோண்டாவில் கிழக்கு பிரசைகள் குழு தீர்மானித்துள்ளது. (ச)

**பண்டத்தரிப்பில்**

பண்டத்தரிப்பில் உள்ள கடைகள், பொது ஸ்தாபனங்கள், வீடுகள் யாவற்றிலும் கறுப்பு கொடிகள் பறந்து கொண்டிருக்கின்றன. கடைகளில் ஒரு கதவு மட்டுமே திறக்கப்பட்டு வியாபாரம் நடைபெற்று வருகிறது. (ச)

**நெல்லியடியில்**

நெல்லியடியிலும் அதை அண்டிய பகுதிகளான வதிரி, சரணவாய், கரவெட்டி ஆகிய இடங்களிலும் திலீபனுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக திலீபனின் படம் அலங்கரிக்கப்பட்டு சோககீதம் ஒலித்துக் கொண்டிருக்கிறது. (ச-70)

**நாவற்குழியில்**

நாவற்குழியில் தச்சன் தோப்பு, கோயிலாக் கண்டி, மறவன்புலவோ, தனங்கிளப்பு ஆகிய இடங்களிலுள்ள சன சமூக நிலையங்களில் திலீபனுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக கூட்டுப் பிரார்த்தனைகள் நடைபெறுகின்றன. (ச)

**கைதடியில்**

திலீபனின் நினைவு தினத்தை முன்னிட்டு கைதடி பிரசைகள் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட உண்ணாவிரதம் எதிர்வரும் 23ஆம் திகதி கைதடி இனிங்கித்தோட்டம் கந்தசுவாமி ஆலயத்திலும், 24ஆம் திகதி கைதடி வடக்கு கயிற்ற சிட்டி கந்தசுவாமி கோவிலிலும், 25 ஆம் திகதி கைதடி அண்ணன்மார் கோவிலிலும் நடைபெற உள்ளன.

26ஆம் திகதி கைதடிச் சந்தியில் அஞ்சலிக் கூட்டம் ஒன்றும் நடைபெறும். (இ-9)

## பனம் பொருள் செய்முறைக் கருத்தரங்கு

சரவணை திருவள்ளுவர் மாதர் முன்னேற்றச் சங்கத்தின் ஆதரவில் பனம் பொருள் செய்முறைக்கருத்தரங்கு ஒன்று அண்மையில் சின்னமடு றோமன் கத்தோலிக்க வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது

இக் கருத்தரங்குக்கு செல்வி க. பரமேஸ்வரி தலைமை வகித்தார்.

## வேணுவில் கிராமத்தில் மீளக்குடியேற அனுமதி

புதுக்குடியிருப்பு செப் 21

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் உள்ள வேணுவில் கிராமத்தில் மக்கள் மீளக் குடி அமர முடியும்.

அமைதிப் படையினர் இதற்கான அனுமதியை உதவி அரசாங்க அதிபர் திரு. அ. இராசரத்தினத்துக்குத் தெரிவித்தனர்.

புதிதாக உதவி அரசாங்க அதிபராகப் பதவியேற்ற திரு அ. இராசரத்தினத்திடம் புதுக்குடியிருப்பு பிரதேச மக்களின் தற்போதைய குறைபாடுகள் பற்றிய மகஜர் ஒன்றை பிரசைகள் குழுவின் சார்பில் த. சண்முகநாதன், திரு. தர்மலிங்கம், திரு. பரமலிங்கம் ஆகியோர் சமர்ப்பித்திருந்தனர்.

அதனைப் பெற்றுக் கொண்ட உதவி அரசாங்க அதிபர் அமைதிப் படையினரிடம், வேணுவில் கிராம மக்களின் குறைபாடுகளை எடுத்துக் கூறி அவர்கள் தத்தமது வீடுகளில் மீளக்குடியிருப்பதற்கான அனுமதியை பெற்றுக்கொடுத்தார். (இ-126)

## தியாகி திலீபனுக்கு
## புதுக்குடியிருப்பு பகுதிகளில் பரந்த முறையில் நினைவஞ்சலி

புதுக்குடியிருப்பு, செப் 21

புதுகுடியிருப்புப் பிரதேசம் எங்கும் தியாகி திலீபனுக்கு நினைவு தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

சகல கடைகளிலும் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டுள்ளன. வீதிகளில் தோரணங்களும் வாழைமரங்களும் கட்டப்பட்டுள்ளன. வீர அஞ்சலி வாசகங்கள் வீதிகளுக்குக் குறுக்கே தொங்கவிடப்பட்டுள்ளன.

புதுகுடியிருப்புப் பிரதேசத்தில் கிராமம் கிராமமாக, உண்ணாவிரத வைபவங்கள் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

உண்ணாவிரதம் நடைபெறும் இடங்களில் சோககீதங்கள் இசைக்கப்படுகின்றன.

திலீபனின் இறுதி அஞ்சலி நாளான 26 ஆம் திகதி மிகப் பிரமாண்டமான முறையில் ஒரு பொதுக்கூட்டத்தையும் உண்ணாவிரதத்தையும் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இம்முயற்சிகளில் புதுக்குடியிருப்பு கிழக்கு பிரசைகள் குழு, புதுக்குடியிருப்பு மேற்கு பிரசைகள் குழு இரணைப்பாலை அன்னையர் முன்னணியினர், புதுக்குடியிருப்பு அன்னையர் முன்னணியினர் ஏனைய தொண்டர் ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் முக்கிய பங்கு வகிக்கின்றனர். (இ-162)

## கடற்றொழிலாளர் சங்கம் அவர்களுக்குவரப்பிரசாதம்

கரவெட்டி செப்21

இக்கட்டான கால கட்டத்தில் கடற்றொழிலாளர் சிக்கன கடனுதவி கூட்டுறவுச்சங்கம் பொருளாதார வளமற்ற கரவெட்டி கடற்றொழிலாளர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

கரவெட்டி சண்டில் கடற்றொழிலாளர் சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கக் காரியாலயத்தை திறந்து வைத்து உரையாற்றுகையில் பேராசிரியர் கா.சிவத்தம்பி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சங்கத் தலைவர் திரு. ஏ, சின்னத்தம்பி விழாவிற்குத் தலைமை வகித்தார்.

பேராசிரியர் சிவத்தம்பி தனது உரையில் தெரிவித்ததாவது:

இ[illegible] சங்கத்தின் உதவியுடன் சிறு கைத்தொழில் வளங்களையும் அமைத்துக் கொள்ள முடியும்.

தற்போது போருட் நிறுவனத்தினரால் இது போன்ற சங்கங்களுக்கு கடன் வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன.

எனவே சங்கத்தை ஓங்கச் செய்து அவர்களின் உதவியுடன் சங்கத்தை வளர்க்க வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

போருட் நிறுவனப் பிரதிநிதி திரு. ம. ஆனந்தராசா கடற்றொழிலாளர் பரிசோதகர் திரு. ந. கணேசமூர்த்தி கிராமசேவையாளர் திரு. கனுவல் தம்பி ஆகியோரும் உரையாற்றினர்கள் (ச-70)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப்புலிகள் பங்குபற்ருத தேர்தல் ஜனநாயகமானதாக இருக்காது

## தென்மராட்சி பிரசைகள்குழு இந்தியத் தூதுவர் டிக்ஷிற்றுக்கு மகஜர்

தமிழீழ விடுதலைப் புலிகள் பங்கு பற்ருத தேர்தல் ஜனநாயகமானதும் அல்ல சமாதானம் ஆனதும் அல்ல ;

தென்மராட்சிப் பிரசைகள் குழு இந்தியத் தூதுவர் டிக்ஷிற்றுக்கு அனுப்பியுள்ள மகஜரில் பேற்கண்டவாறு வலியுறுத்தி உள்ளது.

மகஜரின் முழு விபரம் வருமாறு:-

சென்ற பல மாதங்களாக நாங்கள் பூரணமான யுத்தநிறுத்தத்தை திரும்பத் திரும்ப வலியுறுத்தி வருகிருேம்.

தென்மராட்சி மக்கள் சார்பில் இந்தியப் பிரதமர் கௌரவ ராஜீவ் காந்திக்கு மேஜர் ஜெனரல் சர்தேஷ் பாண்டே ஊடாக நாம் அனுப்பி வைத்துள்ள மகஜர்களில் நிபந்தனையற்ற யுத்த நிறுத்தம் ஒன்றே பேச்சுவார்த்தைகளுக்கு அடித்தளமாக அமைய வேண்டும் என்றும் அப்படி நடைபெறும் பேச்சுவார்த்தைகள் நிபந்தனை எதுவும் அற்றதாகவும் தமிழ் மக்களின் நியாயமான அபிலாசைகளை அடங்கியுயுள்ளதாகவும் இருக்க வேண்டுமென்ற எமது உறுதியான நிலைப்பாட்டை வலியுறுத்தியிருந்தோம்.

கௌரவ ராஜீவ்காந்திக்கு 14-6-88இல் நாம் அனுப்பிய மகஜரின் 8வது பந்தி பின்வருமாறு கூறுகிறது.

''விடுதலைப் புலிகளுக்கும் இந்திய அரசாங்கத்துக்குமிடையே பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு வசதியாக உடனடியாக இரு சாராராலும் யுத்த நிறுத்தம் பிரகடனப்படுத்தப் படவேண்டும். அதன்பின் உடனடியாக நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட வேண்டும்.

இந்த மகஜர் பிரதம மந்திரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப் பட்டது.

### தெட்டத்தெளிவாக

22-8-88 இல் மேஜர் ஜெனரல் சர்தேஷ் பாண்டேக்கு அனுப்பிய மகஜரின் 2 ஆம் பந்தியில் விடுதலைப் புலிகளுடன் நடத்தப்படும் பேச்சுவார்த்தைக்கு முன்னேடியாக யுத்த நிறுத்தம் செய்ய வேண்டும் என்பதை நாம் தெட்டத்தெளிவாக வற்புறுத்தியிருந்தோம்

மேல்கூறப்பட்ட பந்தி பின்வரும் அழுத்தத்துடன் முடிவடைகிறது.

''இது விடுதலைப் புலிகளின் உண்மையானதும் ஆழ்ந்த ஆணித்தரமான பயமுமாகும்.

விடுதலைப் புலிகளுக்கும் இந்திய அரசாங்கத்துக்குமிடையே சுமுகமானதும் பயன்தரக்கூடியதுமான பேச்சுவார்த்தையை நடத்துவதற்கும் ஒரு சௌஜன்யமான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கும் ஒரு நிபந்தனையற்ற யுத்த நிறுத்தம் கட்டாயமானது.

இதன் மூலம் இநதிய அரசாங்கம் இந்த அச்சத்தை நிவர்த்தி செய்வது அதனது தலையான கடமை ஆகும்.

பிரதம மந்திரி ராஜீவ் காந்திக்கு மேஜர் ஜெனரல் சர்தேஷ் பாண்டே ஊடாக 6-9-88 இல் அனுப்பிய எமது மகஜரில் யுத்த நிறுத்தத்தைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டுமென்பதையும் இரு சாராருக்குமிடையே முடிவான சமாதானம் ஏற்படும்வரை வடக்கு கிழக்கில் எதுவிதமான தேர்தலும் நடைபெறக் கூடாதென்ற எமது உறுதியான கருத்தையும் வலியுறுத்தியிருந்தோம்.

### சமரசம் ஏற்படும்வரை யுத்த நிறுத்தம்

''பூரணமான யுத்த நிறுத்தம் அமுலாக்கப் பட்டவுடன் அது விடுதலைப் புலிகளுடன் சமரசம் ஏற்படும் வரை அமுலில் இருக்க வேண்டும்.

யுத்தத்தில் ஈடுபட்டுள்ள பகுதியினருக்கிடையே தீர்க்கமான சமரசம் ஏற்படும் வரை வடக்கு கிழக்கு மாகாணங்களில் தேர்தல் நடத்கூடாது என்பது எமது உறுதியான நிலைப்பாடாகும்.

சமரச உடன்பாடுகளுக்கு முன்பதாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் தேர்தல் நடைபெறுமாயின் அது அழிவை விளைவிக்கக் கூடிய சிக்கல்களையும் தமிழ் சமுதாயத்தின் இனக்கொலைக்கும் இட்டுச் செல்லும்.

12-9-88இல் நாம் பிரிகேடியர் எஸ். கே. டாவான் (பலாலி கொமாண்டன்ற்) உடன் நடத்திய கூட்டத்தில் நிபந்தனையற்ற யுத்த நிறுத்தத்தையும் அதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையையும் ஆரம்பிக்கும்படி வலியுறுத்தினேம்.

யுத்த நிறுத்தத்தை தொடர்ந்து வடக்குக் கிழக்கு பகுதிகளில் தேர்தல் நடைபெறுமாயின் தென்மராட்சி பிரசைகள் குழு அந்த நடவடிக்கையைத் தீவிரமாக எதிர்த்து தேர்தலுக்கெதிராகப் பிரசாரத்திலும் ஈடுபடும்.

நிபந்தனையற்ற யுத்த நிறுத்தத்தைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதே நியாயமான சமரசத்துக்கு வழி என்பது எமது கருத்து.

யுத்தநிறுத்தத்தைப் பற்றியும் அதைத் தொடர்ந்து ஆயுதங்களை சரணடைதல் பற்றி லெப்டினன்ற் ஜெனரல் கல்கத்தின் அறிவிப்பு பற்றியும் இந்திய அரசாங்கம் பத்திரிகைகளுக்கு விடுத்த செய்தி எமக்கு பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளது,

15-9-88 இல் நாம் மேஜர் ஜெனரல் சர்தேஸ் பரண்டேயுடன் நடத்திய கூட்டத்தில் மேற்கூறிய ஏமாற்றத்தை பற்றியும் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிக்க வேண்டுமென்ற கருத்தினையும் வெளியிட்டோம்.

ஆகவே யுத்த நிறுத்தத்தை நீடிக்கும்படியும் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையை திரும்பவும் ஆரம்பிக்கும்படியும் கோருகிருேம்;

விடுதலைப் புலிகள் பங்குகொள்ளாத தேர்தல் ஜனநாயகமானதும் அல்ல; சமாதானம் ஆனதும் அல்ல.

## வாசகர் திருமுகம்

## தமிழ் பேசும் சட்டத்தரணிகள் சங்கம்

அண்மையில் ஸ்ரீலங்கா பொலீஸ் காவலில் இருந்தபோது மரணமான சட்டத்தரணி விஜேதாஸ லியனராச்சியின் மரணம் தொடர்பாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் எடுத்து வரும் கடும் நடவடிக்கைகளை ஒரு சட்டத்தரணி என்ற முறையில் வரவேற்கும் நான், குறித்த இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தமிழ் பேசும் சட்டத்தரணிகளின் விடயத்தில் மாற்ருந்தாய் மனப்பான்மையுடன் நடந்து கொண்டுள்ள பல சந்தர்பங்களையும் இங்கு நான் குறிப்பிடவேண்டும்.

குறிப்பாக ஸ்ரீலங்கா இராணுவ நடவடிக்கையின் போது பெரும்பாலான சட்டத்தரணிகளது உடமைகள், பெறுமதிமிக்க புத்தகங்கள், அழிக்கப்பட்டன. அத்துடன் பல சட்டத்தரணிகள் பல விதமாக தாக்கப்பட்டனர். மேலும் யாழ்ப்பாண நீதிமன்ற சுற்ருடலில் மக்கள் நடமாட முடியாத அளவுக்கு ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப் பட்டன. இறுதியாக யாழ். மாவட்ட நீதிமன்றத்தைத் தவிர அனைத்து நீதிமன்ற அலுவலகங்கள் அப்புறப்படுத்தப் பட்டன. அப்போது யாழ்ப்பாண சட்டத்தரணிகளால் கொழும்பு சட்டத்தரணிகள் சங்கத்துக்கு எடுத்துக்காட்டப்பட்ட பிரச்சினைகள் கவனிக்கப்படவில்லை.

அத்துடன் வடமராட்சி ஒப்பறேசன் லிபறேசனில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்திய விமானங்கள் உணவுப் பொட்டலங்கள் போட்டதை கண்டித்து ஆர்ப்பாட்ட ஊர்வலமும் தற்போதைய சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் தலைமையில் கொழும்பில் நடந்ததை யாம் மறந்துபோய்விடவில்லை.

இந்த நாட்டில் தமிழர் என்ருல், அவர் என்ன தொழில் செய்தாலும் அரசாங்கமோ அல்லது தொழிற்சங்கங்களோ தமிழர்களை இரண்டாம் தரப் பிரசைகளாகவே நடத்தி வந்துள்ளன.

இன்றைய நிலையில், வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைந்த தமிழ் மாநில அமைப்புக்கு மக்கள் போராடி வரும் இவ்வேளையில், மக்களது உண்மையான நிலையை, நோக்கத்தை வெளிப் படுத்த தமிழ் பேசும் சட்டத்தரணிகள் மொழி வழித் தொழிற் சங்கமொன்றை உருவாக்கிப் போராட முன்வரவேண்டும்

தமிழ் பேசும் மக்கள் படும் இன்னல்களையும், அவலநிலையை சம்பந்தப்பட்டவர்களுக்கு எடுத்துக் காட்ட, தமிழ் பேசும் சட்டத்தரணிகள் முன்வர வேண்டும். ஆகவே மொழிவழித் தொழிற் சங்கமாக ''தமிழ் பேசும் சட்டத்தரணிகள் சங்கம்'' என்ற அமைப்பை உருவாக்கி தமிழ் பேசும் சட்டத்தரணிகள் தங்களது உரிமைகளை வென்றெடுப்பதுடன், சமூகத்துக்கு முன்னுதாரணமாக நின்று செயல்பட வேண்டும்.

அப்படிச் செயல்பட்டால் தான், சட்டத்தரணித் தொழிற்கல்வியை உழைப்பதற்காகவே தமிழர்கள் கற்ருர்கள் என்ற அவல நிலையை போக்க முடியும். எனவே தமிழ் பேசும் சட்டத்தரணிகள் ஒன்றிணைந்து உடனடியாக மொழிவழித்தொழிற் சங்கத்தை உருவாக்க முன்வர வேண்டும். அத்துடன் இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்துக்கு புறம்பாக சிங்களம் பேசும் சட்டத்தரணிகளது நலனைக் கவனிக்க ''சிங்கள சட்டத்தரணிகள் சங்கம்'' என்ற அமைப்பு செயல்படுவதையும் நாம் இங்கு நோக்கவேண்டும். எனவே தமிழ் பேசும் சட்டத்தரணிகள் உடனடியாக ஒரு சங்கத்தை உருவாக்குவதற்கு ஒத்துழைக்குமாறு வேண்டுகிருேம்.

ஒரு சட்டத்தரணி

சுன்னுகம்.

## கோய்யாத் தோட்டம் சனசமூக நிலையம் சாம்பியன்

யாழ்ப்பாணம், செப்.21

யாழ் மாநகரசபை சனசமூக நிலையங்களின் சமாஜம் நடத்திய மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கொய்யாத் தோட்டம் சனசமூக நிலையம் சாம்பியனுகியது.

கடந்த 4 ஆம் திகதி அரியாலை சனசமூக விளையாட்டு மைதானத்தில் இப் போட்டி நடைபெற்றது.

முதலில் துடுப் பெடுத்தாடிய கொய்யாத் தோட்டம் சனசமூக நிலையம் 12 ஓவர்களினுல் 5 விக்கட்டுகள் இழப்புக்கு 57 ஓட்டங்களைப் பெற்றது.

திரு. எல்மோ போல் 19 ஓட்டங்களையும் திரு. நாதன் 13 ஓட்டங்களையும் திரு. ஜெயா 8 ஓட்டங்களையும் பெற்றனர்.

திரு. இராஜன் 2.3 ஓவர்களில் 6ஓட்டங்களை கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் திரு. கணேஸ் 3 ஓவர்களில் 12 ஓட்டங்களைக்கொடுத்து2விக்கட்டுக்களையும் திரு.செந்தில் 3 ஓவர்களில் 14 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினுர்கள்.

கொக்குவில் பொற்பதி சனசமூக நிலையம் துடுப் பெடுத் தாடிய போது 10 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 50 ஓட்டங்களைப்பெற்றது.

திரு. நிமால் 18 ஓட்டங்களையும் திரு.கணேஸ் 14 ஓட்டங்களையும்திரு. கோகுலன் 7 ஓட்டங்களையும் பெற்றனர்.

திரு. எல்மோபோல் 2 ஓவர்களில் 4 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுகளையும் திரு.பொ ஜெயக்குமார் 3 ஓவர்களில் 20 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டு களையும் திரு. தி.ஜெயக்குமார் 3 ஓவர்களில் 8 ஓட்டங்களைக் கொடுத்து 1 விக்கெட்டையும் வீழ்த்தினுர்கள்.

கொய்யாத்தோட்டம் சனசமூக நிலையம் எடுத்த ஓட்டங்கள் 57. கொக்குவில் பொற்பதிசனசமூக நிலையம் எடுத்த ஓட்டங்கள் 49.

கொய்யாத்தோட்டம் சனசமூக நிலையம் 8 ஓட்டங்களால் கொக்கு பொற்பதி சனசமூக நிலையத்தை வெற்றியீட்டி சம்பியனுகத் தெரிவு செய்யப்பட்டது.

இப்போட்டிக்கு மத்தியஸ்தர்களாக திரு.க. நந்தகுமார் திருநிறேசியும் கடமையாற்றினர்.

இதற்கு முன் நடந்த போட்டிகளில் கொக்குவில் பொற்பதி சனசமூக நிலையம் 1ஓட்டத்தாலும் 4 விக்கெட்டுக்களாலும் குருகர் றெக்கிளமேசன் சனசமூக நிலையத்தை வென்று இறுதிப்போட்டியில்விளையாடித் தகுதி பெற்றிருந்தது.

கொய்யாத்தோட்டம் சனசமூக நிலையத்துக்கும் யாழ். திருவள்ளுவர் சனசமூக நிலையத்துக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் கொய்யாத் தோட்டம் சனசமூக நிலையம் 4 ஓட்டங்களால் வெற்றி பெற்றிருந்தது. (இ)

# தமிழ் இப்போது சிறையில்; அதனை மீட்டு எடுக்க வேண்டும்

## அறிவியல் கருத்தரங்கில் உரை

— சென்னையிலிருந்து தி. மேனகன் —

சென்னை, செப். 21

''நல்ல தமிழ் நூல்களை வெளிநாட்டினரும் படித்துப் பயன்பெறும் வகையில் அவற்றை மொழிபெயர்க்க வேண்டும்'' என்று முன்னுள் நிதியமைச்சர் சி. சுப்பிரமணியம் கருத்துத் தெரிவித்தார்,

'அறிவியல் உலகிற்கு தமிழ்' என்ற தலைப்பில் சென்னை அண்ணு பல்கலைக்கழகத்தில் இரண்டு நாள் கருத்தரங்கு ஒன்று சடந்தமாதம் நடந்தது.

கருத்தரங்கில்முன்னுள் நிதிஅமைச்சர் சி.சுப்பிரமணியம் பேசியதாவது;

தமிழ் மொழிபற்றி மேடையில் பெருமையாய் பேசிவருகிருேம். ஆனுல் பிறமொழி அறிஞர்கள் நமது தமிழை அவர்களது மேடையில் பேசுமாறு நாம் செய்ய வேண்டும்,

புகழ் மிக்க தமிழ் நூல்கள் குறித்து நாம் மட்டும் பாராட்டிக் கொண்டு இருந்தால் போதாது. மற்றவர்களும் பாராட்டும் விதத்தில் பல அரிய தமிழ் நூல்களை மொழிபெயர்த்துவெளியிடவேண்டும். இதற்கென ஒரு குழு அமைக்கப்படவேண்டும் இந்தப்பணி விரைவு படுத்தப்படுதல் அவசியம்.

வேரும் அடிமரமும் போஷிக்கும் அளவில் தான் மேலே மேலே வளரும். அப்போது தான் புதிய தளிர்,இலை, மலர், காய், கனி என்று உருவாகும். அது போலவே தமிழ் மொழியை நாம்போஷிக்கும் அளவு அது மேலும் மேலும் புதியவைகளை நமக்குத் தரும்.

மொழி என்பது இடத்துக்கு ஏற்ப மாறுபடுகிறது. அறிவியல் என்பது எல்லா இடங்களிலிருந்தும்புறப்படும் அறிவியல் சொற்கள் உலகப் பொது சொற்களாகக் கருதப்படவேண்டும்.

ரோமன் எழுத்துக்களை பயன்படுத்தும் போது பொதுவான விதி அமைக்க வேண்டும். இது பல்வேறு குழப்பங்களை உருவாவதைத் தவிர்க்கும்.

தமிழ் மொழியானது அறிவியல் உலகத்தில் பெரும் சிறப்பை எட்ட வேண்டும். தமிழ்மொழியில் பல மாற்றங்களும், சீர்திருத்தங்களும் அவசியம். இதை அதிக காலம் எடுத்துச் சொண்டாவது விரைவில் முழுமையாக செய்து முடிக்க வேண்டும். அப்போது தான் வரும் தலைமுறைகளுக்கு சிரமமிருக்காது.

இவ்வாறு சி. சுப்பிரமணியம் பேசினுர்.

### முழுமையாக ஆராயவில்லை

கருத்தரங்கின் நோக்கம் பற்றி அண்ணு பல்கலைக்கழக துணைவேந்தர் குழந்தைசாமி வரவேற்புரையில் கூறியதாவது;

இந்திய பாரம்பரியம், இந்திய பண்பாடு என்று கூறுவதன் அடிப்படையாக அமைந்தவை வடமொழியும் தமிழும் ஆகும். ஆனுலும் தமிழின் பங்கு முழுமையாக இன்னும் ஆராயப்படவில்லை. இதனை நாம் மாற்றவேண்டும்.

நாம் மற்ற மொழிகளின் குறைகளை, தகுதியின்மையைப் பற்றிஎழுதிய அளவிற்கு நமது மொழியின் தகுதியைப் பற்றி ஆய்வு செய்யவில்லை, எழுதவில்லை, உலக அறிஞர்களின் காதுகளுக்கு தமிழ் மொழியின் பெருமை சென்று எட்டும்படி நாம் பாடுபட வேண்டும்.

பழந்தமிழ் இலக்கியங்கள் உலக அரங்கில் இடம்பெற வேண்டும். ஆனுல் இந்தச் சிறப்பு கிடைக்காமைக்கு ஆங்கிலம், ஜெர்மன், ரஷ்யன் போன்ற மொழிகளில் இதனை முறையாக மொழி பெயர்த்து உலக அரங்கில் அறிமுகப்படுத்தாமை தான் முக்கிய காரணம்.

பல்கலைக் கழகங்களும் அரசும் தனிப்பட்ட வெளியிட்டாளர்களும் எழுத்தாளர்களும்இதில் பெரும் பங்கு வகிக்க வேண்டும்.

தபால்- தந்தி நிலையங்களில் ஆங்கிலம், இந்தி மொழிகளில் தந்தி அளிக்க வசதி உள்ளது. தொலை அச்சு (டெலிபிரிண்டர்) வசதியும் உள்ளது.ஆனுல் தமிழ்மொழி மூலம் தந்தி அனுப்புவது இயலாத நிலையில் உள்ளது. இதற்கு நாம் ஏற்பாடு செய்வது அவசியமும் அத்தியாவசியமும் ஆகும்.

தமிழில் நல்ல தட்டச்சுகள் கூடக்கிடையாது. ஆனுல் ஆங்கிலத்திலே 15க்கும்மேற்பட்ட வகையான தட்டச்சுக்கள் உள்ளன. இதிலும் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

அறிவியல் துறைகள் நவீன கல்வித்துறைகள் அனைத்தும் தமிழில் இடம் பெற வேண்டும். பல்வேறு கலைச்சொற்களை நாம் உருவாக்க வேண்டும். இன்று நாம் கலைச்சொற்களை தரப்படுத்தும் காலகட்டத்தை எட்டியுள்ளோம்.

இவ்வாறு குழந்தை சாமி பேசினுர்.

இலங்கைத் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணிச் செயலர் அமிர்தலிங்கம் தலைமை தாங்கினுர். அவர் பேசியதாவது:-

வரலாற்றுச் சிறப்பு மிக்கதாக அமைந்திடப் போகும் இந்தக் கருத்தரங்கை ஏற்பாடு செய்த அண்ணு பல்கலைக்கழகத் துணைவேந்தர் குழந்தை சாமி பாராட்டத்தக்கவர். அவர் இலங்கையிலும் பல ஆண்டு பணி புரிந்தவர்.

மொழி என்பது கருத்தைப் பரிமாறிக் கொள்ளும் கருவி என்பதோடு மட்டும் கருதுவது நமது அனுபவக் குறைவை உணர்த்தும். மொழி என்பது வாழையடி வாழையாய் வந்த கருத்துக்கள், உணர்வுகளை வருங்கால சந்ததிக்கு விட்டுச்செல்லும் களஞ்சியம் ஆகும்.

தமிழ்மொழி என்று சொன்னுல் அது பேசப்படும் அனைத்து இடங்களிலிலும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். ஒரே மொழி வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு விதமாகப் பேசப்படக் கூடாது.

தமிழ்வளர்ச்சிகுறித்து நாம் பேசிவரும் அளவுக்கு செயல்பாட்டில் நமது கவனம் மிக மிகக் குறைவு. இந்த நிலை மாற வேண்டும். இந்தக் கருத்தரங்கு தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு ஒருபெரும் திருப்பு முனையாக அமைய வேண்டும்.

இவ்வாறு அமிர்தலிங்கம் பேசினுர். (இ-4)

## யுத்த நிறுத்தம் நீடிக்கப்பட வேண்டும்

யாழ்ப்பாணம், செப். 21

இந்திய அமைதிப் படையினர் தொடர்ந்து யுத்த நிறுத்தம் செய்து விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துமாறு இந்தியப் பிரதமரை கேட்பதென்றும், விடுதலைப்புலிகளை பேச்சுவார்தைக்கு செல்ல வேண்டுமென கேட்பதென்றும் யாழ். மாநகரசபை சனசமூக நிலையங்களின் சமாசம் தீர்மானம் நிறைவேற்றி உள்ளது.

பிரஸ்தாப சமாசத்தின் கூட்டம் யாழ். கொட்டடி கற்குளம் ஸ்ரார் சனசமூக நிலையத்தில் நடைபெற்றபோதே இந்ததீர்மானம் எடுக்கப் பட்டது. (இ-9)

# ஆசிரியரின் அந்தஸ்து சமூகத்தில் உயர்ந்துவருகிறது

## கல்விப் பணிப்பாளர் கூறுகிருர்

மானிப்பாய், செப் 21

ஆசிரியர் பணி மகத்தானது. சமூகத்தில் இப் பணியின் அந்தஸ்து இப்போது உயர்வடைந்து வருகின்றது. உங்களில் பலர் அதிபராக வரப் போகிறீர்கள் முகாமையாளராக வரப்போகின்றீர்கள். அக்காலத்தில் உங்கள் உதவி ஆசிரியர்கள் மீது நம்பிக்கை வையுங்கள். உங்கள் நிர்வாகத்தை அவர்களுடன் பங்கிட்டு பரவலாக்குங்கள்.

தீர்மானங்கள் எடுக்கும் போது ஆசிரியர்களுடன் கலந்தாலோசித்து, தரவுகளை பெற்றுக்கொண்டு செயற்படுங்கள். தான்தோன்றித்தனமாக முடிவுகளை எடுத்து நிர்வாகத்தில் தோல்வி காணுதீர்கள்.

இவ்வாறு யாழ்ப்பாணம் கல்விப்பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகம் ஆசிரியர்களுக்கு அறிவுரை வழங்கினுர்.

இலங்கை அதிபர் தரம் I, II, III. க்கான ஆயத்த வகுப்புக்களை ஆரம்பித்து வைத்து ஆற்றிய உரையில் அவர் இதனை தெரிவித்தார்.

அதிபர் தரப் பரீட்சைக்கு விண்ணப்பித்த ஆசிரியர்களுக்கான ஆயத்த வகுப்புக்களை இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் ஒழுங்கு செய்திருந்தது.

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற இவ்வகுப்புக்களின் ஆரம்ப விழாவை இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் தலைமை வகித்து ஆரம்பித்து வைத்தார்.

வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. வெ சபாநாயகம் இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினுர்.

திருமதி மகேஸ்வரி வேலுப்பிள்ளையின் தமிழ் தாய் வணக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இவ் வகுப்புக்களில் 500க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். (ஒ-90)

## 4500 உணவுப் பொதிகள்

புதுக்குடியிருப்பு,செப்.21

அண்மைக் காலச் சம்பவங்களினுல் பாதிக்கப் பட்டுள்ள முல்லைத்தீவு மக்களுக்கு 4500 உணவுப் பொருள்கள் கொண்ட பார்சல்களை வழங்க றெட்பானு நிறுவனம் முயற்சி எடுத்துள்ளது.

பாதிக்கப்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்தவர்களுக்கென ஏற்கனவே 2500 பார்சல்கள் வழங்கப்பட்டுள்ளன.

மீதி 2000 பார்சல்களையும் விரைவில் வழங்க நடவடிக்கை மேற் கொள்ளப்படுகின்றது. (இ 126)


## முக்கிய அறிவித்தல்

21-9-88 புதன்கிழமையிலிருந்து வகுப்புக்கள் யாவும் (சனி, ஞாயிறு உட்பட) வழமை போல் நடைபெறும் என்பதை சகல மாணவர்களுக்கும் அறியத் தருகின்ருேம்.

அதிபர்

விக்ஞுயூசன் சென்ரர்

யாழ்ப்பாணம்.

(C-240)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கான

# இலவச பாடநூல்கள் வருட முடிவுக்குள் வழங்கப்படும்

## கல்விப்பணிப்பாளர் நடவடிக்கை

மானிப்பாய், செப், 21 யாழ்ப்பாணம் பாடசாலை மாணவர்களின் 1989ஆம் ஆண்டுக்கான இலவச பாடநூல்கள் முழுவதையும் இந்த வருடம் முடிவடைவதற்கு முன்பதாக மாணவர்களுக்கு வழங்கி விடவேண்டும் என்பதில் வடமாநிலக்கல்விப் பணிப்பாளர் திரு வெற்றிவேலு சபாநாயகம் தீவிரகவனம் செலுத்தி அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்.

கடந்த காலங்களைப் போலன்றிஇவ்வருடமே, அடுத்த வருடத்துக்கான இலவச பாடநூல்களை வழங்கினால் தான் விடுமுறை காலங்களில் மாணவர்கள் அவற்றை பயன்படுத்திக் கொள்ள முடியும்.

1989 ஆம் ஆண்டுக்குத் தேவையான நூல்களை கணக்கிட்டு விண்ணப்பிக்குமாறு கல்விப்பணிப்பாளர் பாடசாலை அதிபர்களை வேண்டியுள்ளார்.

1989 ஆம் ஆண்டுக்கு 6ஆம் ஆண்டுக்கான கிறிஸ்தவம் (ரோ-க) புத்தகம் புதிதாக எழுதப்பட்டும், 6ஆம் ஆண்டுக்கான கணிதம் திருத்திய பதிப்பாகவும் வெளியிடப்படவுள்ளன.

மாணவர் பாவித்த நூல்களை முடிந்தவரை மீளவும் பாவிப்பதற்கு எடுத்துக்கொள்ளவேண்டும். எனினும் கிழிந்த அல்லது கட்டுவிட்ட புத்தகங்களை விநியோகிக்க வேண்டாம் என்றும், நூல்களை தெரிவு செய்யும் போது அதிபர்கள் கவனமாகவும் பொறுப்புணர்ச்சியுடனும் செயற்பட வேண்டும் எனவும், நூல்களை விநியோகம் செய்தபின்னர் குறைபாடுகள் காணப்பட்டால் அது பற்றி அடுத்த வருட முதலாம் தவணையின் ஆரம்பத்தில் அறிவித்து வேண்டிய நூல்களை பெற்றுக்கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்தார். (இ-90)

## கால்நடைகள் மர்ம மறைவு

மன்னார், செப், 21 அடம்பனில் உள்ள ஸ்ரீலங்கா இராணுவ முகாம் சுற்றாடலில் உள்ள கால்நடைச் சொந்தக்காரர்கள் தங்கள் ஆடு, மாடுகள் திடீர், திடீரெனக் காணாமல் போவது குறித்துக் கவலை அடைந்துள்ளனர்.

ஸ்ரீலங்கா இராணுவத்தினரே இக்கால்நடைகளை இறைச்சிக்காகப்பிடித்து வருகிறார்கள் என்று கால்நடைச்சொந்தக்காரர் ஒருவர் ''உதயனு''க்குத் தெரிவித்தார். (இ-ச)

## ரெலோவின் மத்திய குழு முடிவெடுக்கும்

மட்டக்களப்பு செப் 21 ''ரெலோ இயக்கம் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு தேர்தலில் பங்கு பெறுதல் குறித்து தலைமைப் பீடத்தின மத்திய குழு கூடித் தீர்மானிக்கும். அதன் பின்புதான் முழு விபரமும் அறிவிக்கப்படும்'' இந்தத்தகவலை ரெலோ சார்பில் மட்டக்களப்பு அம்பாறை அரசியல் பிரசார இணைப்பாளர் சே. பாலு அறிக்கை ஒன்றில் தெரிவித்தார்.

சகல இயக்கங்களும் தமது பகைமைகளை மறந்து தமிழ் மக்களின் விடிவுக்காக ஒன்று பட வேண்டுமென அழைக்கின்றோம்

சில தீய சக்திகள் இன்றுஎமதுஇயக்கத்தை குழப்புவதற்காக முறைகேடான வழிகளில் ஈடுபடுகின்றன. இவர்களை மக்கள் இனம் காண வேண்டும்.

எமது தலைவர் ஸ்ரீ சபாரெத்தினம் மறைவின் பின்பு தலைவர் செல்வம் தலைமையில் தான் நாம் செயல்படுகின்றோம்

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது [இ 21]


## இரண்டாவது
## ✯ பிறந்த நாள் வாழ்த்து ✯
## செல்வன் தணிகாசலம் சேந்தன்

ஏழாலை மேற்கு சுன்னாகத்தைச் சேர்ந்த வைத்தியர் தணிகாசலம் ஆசிரியை இராஜேஸ்வரி தம்பதிகளின் அருந்தவப்புதல்வன் சேந்தன் இன்று (21-09-88) தனது இரண்டாவது பிறந்த தினத்தை தமதில்லத்தில் கொண்டாடுகின்றார்.


சேந்தனை சகல செல்வமும் பெற்று சீரும் சிறப்புமாக வாழ அப்பா, அம்மா, ஆச்சி, மாமா, மாமி, மச்சான், மச்சாள்மார், இணுவிலைச் சேர்ந்த ஐயா, பெரியம்மா, அண்ணா, அக்காமார், அவுஸ்திரேலியாவிலிருக்கும் அப்பம்மா, பெரியமாமா, மாமி, மச்சான், மச்சாள்மார், சித்தப்பா, சித்தி, சின்னமாமா, மாமி மற்றும் உற்றார் உறவினரும் வாழ்த்துகின்றார்கள்.

(6686)



## CEYGMA PUMPS
## சிக்மா பம்ப்ஸ்

உங்கள் தேவைகளுக்கேற்ற



மின் மோட்டர்கள்
Electric Motor Pumps

| | | | |
|---|---|---|---|
| ½ HP. | 1'' X 1'' | — | 3500-00 |
| ½ HP. | 1½'' X 1¼'' | — | 3950-00 |
| 1 HP. | 1½'' X 1¼'' | — | 4750-00 |
| 1 HP. | 2'' X 1½'' | — | 5250-00 |
| 1½ HP. | 2'' X 2'' | — | 5850-00 |

நீர் இறைக்கும் இயந்திரங்கள்
Engine Pumps

இந்தியன் விலியர்ஸ் பொருத்தப்பட்டது
Indian Villiers Mk, 12　7250.00
குபோடா என்ஜின் பொருத்தப்பட்டது
Kubota Ks. 160　8250-00

இப்பொழுது தாராளமாகக் கையிருப்பில் உள்ளன. எமது பம்புகளுக்கு ஒரு வருட உத்தரவாதம் உண்டு பழுதடைந்த பம்ப்கள் அதிவிரைவில் திருத்தி (Repairs) புனரமைத்துக் கொடுக்கப்படும்.

இவை தவிர உங்கள் தேவைக்கேற்ப விஷேச பம்புகள் மோட்டருடன் இணைத்துக் கொடுக்கப்படும்.

உங்கள் தேவைகளுக்கு தொடர்புகொள்ளுங்கள்.

UNITED AGRO ENGINEERING
274/1. ஆஸ்பத்திரி வீதி,
(பெரியாஸ்பத்திரி முன்பாக)
C/216　யாழ்ப்பாணம்.


## மக்கள் முகம்

### வழிபடுநர் சபை உத்தியோகத்தர்

யாழ்ப்பாணம் செப் 21 கொக்குவில் தலையாழி ஸ்ரீஞானவைரவர் ஆலய வழிபடுநர் சபையின் உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்

போஷகர்கள்: திரு.க. ஆனந்த குமாரராசா திரு ந.கோபாலகிருஷ்ண சர்மா திரு செ பாலசுப்பிரமணியம், தலைவர்: திரு க. சிவசுப்பிரமணியம். உபதலைவர்: திரு வை. ஆ. கணபதிப்பிள்ளை, திரு. தி. அமரசிங்கம் செயலாளர்: திரு க நாகலிங்கம் உப- செயலாளர்: திரு.சு. பாலேந்திரா பொருளாளர்: திரு வ. துரைரத்தினம் கணக்குப் பரிசோதகர்: திரு பி. கனகரத்தினம். (ச)

# காந்தீய நாட்டிலிருந்து வந்தவர்க்கு "காந்தீயத்தை" உணர்த்தியவன்



தமிழுக்காக அவதாரம்:
29- 11- 1963

தமிழ்ப்பணி முடிந்து இறைபதம்:
26- 09- 1987

புதைத்திட நேர்ந்தால் புகழால்
　பூமியே மணக்கும்; தீயால்
சிதைத்திட நேர்ந்தால் தியாகத்தால்
　" தீ " யெலாம் தமிழ் மணக்கும்
சதையுடலை அவனே அளி (ழி) த்திட நேர்ந்ததால்
　அவனியெலாம் தெய்வமானான்
கதைத்திட இடமில்லை யிங்கு
　காவியத்தில் நாயகனானான்
இருப்பான் வான் இருக்குமட்டும்
　இலட்சிய வேங்கையவன்!

— இன்பருட்டி கிராம அபிவிருத்திச் சங்கமும்,
வடமராட்சி மக்களும்.

( C/ 68)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**

அழிவின்று அறைபோகா தாகி வழிவந்த
வன்க ணதுவே படை.

**பொருள்:**

(போர் முனையில்) அழிவு இல்லாததாய் (பகைவருடைய) வஞ்சனைக்கு இரையாகாததாய், தொன்று தொட்டு வந்த அஞ்சாமை உடையதே படையாகும்.

**உதயன்**

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805, 32073

21-09-1988 த. பெ. இல. 23

## ஒரு பக்கம் வைத்து விட்டு...

நேற்றுக் காலை ஏழு மணியோடு முடிய விருந்த போர் நிறுத்தம் மேலும் ஐந்து நாட் நாட்களுக்கு நீடிக்கப்பட்டிருக்கிறது. அதாவது எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை வரை இந்தியத் தரப்பினர் யுத்த நிறுத்தத்தை அனுசரிப்பர்.

இம்மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரைக்கும் இந்தியா ஒரு தலைப் பட்சமான யுத்த நிறுத்தத்தை அறிவித்திருந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகள் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் யுத்த நிறுத்தத்தை வரவேற்று இருந்தனர். அதனால் முதல் ஐந்து நாள் யுத்த நிறுத்தத்தையும் இருதரப்பு யுத்த நிறுத்தம் என்று கொள்ள இடமிருந்தது.

யுத்த நிறுத்தம் நிரந்தரமாக இருக்க வேண்டும். அதன் மூலம் இரு தரப்பாரும் மனம் விட்டுப் பேசி சமரசத்துக்கு வரவேண்டும் என்பதே தமிழ் மக்களின் விருப்பமாக இருந்தது; இருக்கிறது.

இப்போது நீடிக்கப்பட்ட யுத்த நிறுத்த காலத்திலாவது அது நடக்குமா என்றுதான் மக்கள் எதிர்பார்த்திருக்கிறார்கள்.

ஏன், தமிழீழ விடுதலைப்புலிகள் கூட தாம் பேச்சுவார்த்தைக்கு வரப்போவதில்லை என்று வெறுமனே தெரிவிக்கவில்லை தம்மை உத்தியோக பூர்வமாக அழைத்து, பேச்சுவார்த்தைக்கான ஓர் சுமுகமான சூழ்நிலையை இந்தியா உருவாக்காதவரை, தாம் இந்திய அரசுடன் பேசப் போவதில்லை என்றே அவர்கள் தெளிவாகக் கூறியிருந்தார்கள்.

பேச்சுவார்த்தை நடைபெறுவதற்காக இருந்த வழியை முற்றாகத் தடை செய்துவிட்ட நிலையில் எப்படிப் பேச முடியும் என்ற நியாயமான வினாவையும் அவர்கள் எழுப்பி இருந்தனர்.

இந்திய அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் உத்தியோக ரீதியான பேச்சு ஆரம்பிப்பதற்கு முன்னர், மாகாணசபைத் தேர்தல் பற்றிய அறிவிப்பை இலங்கை அரசு வெளியிட்டிருக்கிறது. இது தமிழ் மக்கள் மனதில் பெரும் குழப்பத்தை உண்டு பண்ணி இருக்கிறது.

இந்தியாவுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் உரிய முறையில் பேச்சு நடந்து சமரசம் கண்ட பின்னர், தேர்தல் வந்திருந்தால் மக்கள் அதனை வேறு வகையில் பார்த்திருப்பார்கள். ஆனால் சமரசத்துக்கு முன்னர் தேர்தல் அறிவிப்பு வந்ததால் அதனை அவர்கள் சந்தேகத்துடனேயே பார்க்கிறார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகளைத் தவிர்த்து, தமிழ் மாகாணத்தில் தேர்தல் எதையும் நடத்த முடியாது என்பது தமிழ் மக்களின் நிலை. இதனை இப்பகுதிகளுக்கு வந்திருந்த இந்தியத் தூதுவர் திரு. டிக்ஸிற்றிடம் பிரசைகள் பலரும் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கின்றனர்.

எனவே, தமிழ் மக்கள் மனம் அறிந்த இந்தியா, அதற்கேற்றவாறு நடக்கும் என நம்புகின்றோம். நேற்று முதல் நீடிக்கப்பட்ட யுத்த நிறுத்தம் அதற்கான சிறு அறிகுறி என்று எடுத்துக்கொள்ளலாமா?

யுத்த நிறுத்தத்தை அறிவித்த இந்தியா, தமிழீழ மக்களின் பிரச்சினையைப் பேசித் தீர்ப்பதற்காக சுமுகமான சூழ்நிலையை உருவாக்க மறந்துவிட்டமை எமக்கு வேதனையையும் இந்திய அரசின் நோக்கத்தில் சந்தேகத்தையும் உருவாக்குகின்றது — என்று விடுதலைப்புலிகள் தெரிவித்திருந்தனர்.

அவர்களின் வேதனையையும், சந்தேகத்தையும் நீக்க வேண்டுமாயின் தேர்தலை ஒரு பக்கம் வைத்துவிட்டு. அதற்கு முதலில், விடுதலைப் புலிகளை உத்தியோகபூர்வமாக, உரிய முறையில், தடை செய்யப்பட்ட வழியைத் திறந்து பேசுவதற்கு ஆக்கபூர்வமான ஏற்பாடுகளை இந்தியா உடனே செய்தாக வேண்டும்.

## போலந்து அரசு பதவி விலகியது

வார்ஸோ, செப். 50

போலந்து அரசாங்கம் நேற்று இராஜினாமாச் செய்தது.

பிரதமர் தனது அமைச்சரவையில் இராஜினாமாவைச் சமர்ப்பித்தார்.

இதனை நாடாளுமன்றம் ஏற்றுக்கொண்டது.

பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க தவறியது என்ற குற்றச்சாட்டின் மீது பிரதமர் இராஜினாமாச் செய்தார்.

புதிய அரசு அடுத்த மாதம் பதவி ஏற்கும் என்று அறிவிக்கப்பட்டது. (எ)

# இஸ்ரவேலில் முதலாவது செயற்கைக்கோள்

# உளவு நடவடிக்கைக்குப் பயன்படுத்தப்படுமா?

## அரபு நாடுகள் அச்சம்

வாஷிங்டன், செப். 21

இஸ்ரவேல்நேற்று முன் தினம் வானவெளிக்கு அனுப்பிய செயற்கைக் கோள் உளவு நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படவிருப்பதாக அரபுநாடுகள் குற்றஞ் சாட்டியிருக்கின்றன.

இஸ்ரவேலின் செயற்கைக் கோளில் அமெரிக்காவின் உளவுபார்க்கும் கருவிகள் பொருத்தப்பட்டிருப்பதாக ஜோர்தான் தெரிவித்து இருக்கிறது.

இதனால் அரபுநாடுகள் தங்கள் பாதுகாப்புச் செலவினங்களை பல மடங்கு அதிகரிக்கவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரபு நாடுகளின் குற்றச் சாட்டை அமெரிக்கா மறுத்து உள்ளது.

இஸ்ரவேலின் செயற்கைக் கோள் திட்டத்துடன் அமெரிக்காவுக்குத் தொடர்பு கிடையாது என்று மறுப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செயற்கைக் கோள் உளவு நடவடிக்கைக்கு பயன்படுத்தப்படமாட்டாது என்று இஸ்ரவேல் அறிவித்துள்ளது.

தனது நாடு விண்வெளியுகத்தில் பிரவேசித்துள்ளது என்றும் இஸ்ரவேல் அறிவித்தது.

உலகில் செயற்கைக் கோள் அனுப்பியுள்ள எட்டாவது நாடு இஸ்ரவேலாகும். (எ)

## கிளர்ச்சிக்காரர்களைச் சுட வேண்டாம்

### பர்மாவுக்கு அமெரிக்கா வேண்டுகோள்

வாஷிங்டன், செப் 20

ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது சுடுவதை உடனடியாக நிறுத்தும்படி அமெரிக்கா பர்மா இராணுவ அரசைக் கேட்டுள்ளது.

இராணுவத்துக்கும் கிளர்ச்சிக்காரர்களுக்கும் இடையே வீதிச் சண்டை ஏற்பட்டதைத் தொடர்ந்து சுமார் 100 பேர் வரை உயிரிழந்தனர்.

இதைத் தொடர்ந்தே அமெரிக்கா இந்தவேண்டுகோளை விடுத்திருக்கின்றது.

இதனிடையில் பர்மாவில் நடப்பவற்றை நுணுக்கமாகக் கவனிப்பதாக இந்திய அரசு அறிவித்துள்ளது (எ)

## மந்திரியாக இருந்தபோது சலுகை பெற்றவர்கள் கூடினால் அது ஆதரவா?

### சாத்தூர் ராமச்சந்திரன் கேட்கிறார்

சென்னை, செப் 21

சென்னையில் அ. தி. மு. க. (ஜெ) கொள்கை பரப்புச் செயலாளர்சாத்தூர் ராமச்சந்திரன் நிருபர்களுக்கு கூட்டாக பேட்டி அளித்தனர். அதன் விவரம் வருமாறு:-

**மோடி வித்தை கூட்டம்**

கேள்வி: நால்வர் கூட்டிய ஊழியர் கூட்டத்தில் ஏராளமானவர்கள் கலந்து கொண்டதாகக் கூறி இருக்கிறார்களே?

பதில்.- மோடிவித்தை காட்டுபவனைச் சுற்றிலும் கூட 500 பேர் கூடுகிறார்கள் இந்த நால்வரும் 10 ஆண்டுகளுக்கு மேல் மந்திரியாக இருந்தவர்கள். அவர்களிடம் சலுகை பெற்றவர்கள் இன்று நால்வரும் நிர்க்கதியாக நிற்பதை அனுதாபத்துடன் பார்க்கக் கூடி இருப்பார்கள் எந்த இடத்திலும் அவர்களுக்கு 100 பேருக்கு மேல் கூடவில்லை ஆள் இல்லாததால் தான் சுற்றுப் பயணத்தைத் தள்ளி வைத்துக் கொண்டே போகிறார்கள்.

**நடுத்தெரு நாராயணன்**

கேள்வி: நால்வரையும் ''நடுத்தெரு நாராயணன்'' என்று காளிமுத்து கிண்டல் செய்து உள்ளாரே?

பதில்;- பொடிப்பயல்கள் சுற்றித்திரிகிறார்கள் என்று சபாநாயகர் பாண்டியனும் திருவான்மியூர் சங்கின்கூட்டாளி என்று கே.ஏ. கிருஷ்ணசாமியும் கூறும் அவலநிலை மூத்த தலைவர்களுக்கு வந்ததற்காக வருந்துகிறோம்.

**குழப்பமா?**

கேள்வி:- நீங்கள் குழப்பத்தில் இருப்பதாக கூறப்படுகிறதே?

பதில்:- அ. தி. மு. க. வில் ஜெயலலிதா உறுப்பினர் ஆனது முதல் ஆதரிப்பவர்கள் நாங்கள்.

**பைத்தியம்**

கேள்வி:- ஜெயலலிதா மனநோயாளி என்று திருநாவுக்கரசு கூறி இருக்கிறாரே?

பதில்:- பைத்தியங்களுக்கு மற்ற யாரைப் பார்த்தாலும் பைத்தியமாகவே தெரியும். நல்ல மருத்துவ நிபுணர்களைக் கேட்டால் இதைத்தான் கூறுவார்கள்.

**கனவு**

கேள்வி - ஜெயலலிதாவை நீ கிவிட்டு அனைவரையும் ஒன்று சேர்த்து ஆட்சியைப் பிடிப்போம் என்று அரங்கநாயம் கூறி இருக்கிறாரே?

பதில்;- ஜனநாயகத்தில் கனவு காண அனைவருக்கும் உரிமை உண்டு. (எ-4)

## ஹெய்தியில் சிவில் அரசு

ஹெய்தியின் புதிய இராணுவ அரசுத் தலைவர் சிவிலியன் அமைச்சரவை ஒன்றை நியமித்திருக்கிறார் என்று அறிவிக்கப்பட்டது.

சில தினங்களுக்கு முன்னர் ஹெய்தியில் கடந்த 3 மாதங்களுக்கு இடையில் இரண்டாவது இராணுவப் புரட்சி ஏற்பட்டது தெரிந்ததே. (எ)

## மீண்டும் பேச்சு

நிக்கரகுவா அரசுக்கும் கொன்ரக் கிளர்ச்சிக்காரர்களுக்கும் இடையே மீண்டும் பேச்சுக்கள் நேற்று ஆரம்பித்தன.

குவாதமாலாவில் ஆரம்பமான இப்பேச்சுவார்த்தை அதிகாரிகள் மட்டத்தில்நடைபெற்று வருகின்றது.

உயர்மட்டப் பேச்சுக்களை எப்போது நடத்துவது என்பது இப்பேச்சுக்களின்போது முடிவு செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது (எ)

**வெளி உலகில்**

## பிரதமர் தாட்சரைத் தோற்கடிக்க பிரிட்டனிலும் கூட்டணி

லண்டன், செப் 20

பிரதமர் மார்கரட் தாட்சரின் கன்ஸர் வேட்டிங் அரசை அடுத்த பொதுத் தேர்தலில் தோற்கடிக்க சகல எதிர்க்கட்சிகளும் கூட்டணி அமைக்க வேண்டும் என்று சமூக ஜனநாயகக் கட்சி விடுத்த கோரிக்கை புறக்கணிக்கப்பட்டது.

கூட்டணி அமைக்கும் யோசனையைப் பிரதான எதிர்க்கட்சியான தொழிற்கட்சி நிராகரித்து விட்டது.

கூட்டணி அமைக்கும் யோசனையை சமூக ஜனநாயகக்கட்சி மாநாட்டில் கட்சித் தலைவர் டாக்டர் ஒவன் இந்த வேண்டுகோளை விடுத்தார். (எ)

## பிஜி - ஆஸ்திரேலிய நெருக்கடி பேச்சுக்கள் மூலம் தீர்ந்தது

சிட்னி, செப் 20

பிஜிக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையே ஏற்பட்ட ராஜதந்திர நெருக்கடிப்பேச்சுக்கள் மூலம் சுமுகமாகத் தீர்க்கப்பட்டது

எதிர்க்கட்சித் தலைவரான முன்னாள் பிரதமர் பவித்ராவைச் சந்திக்க முடியாது என்று பிஜி அரசு அறிவித்ததைத் தொடர்ந்து பிஜிக்கான பயணத்தை ஆஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் செனட்டர் இவான்ஸ் ரத்துச்செய்து விட்டார். அதைத் தொடர்ந்தே இந்நாடுகளுக்கும் இடையில் நெருக்கடி ஏற்பட்டது

நேற்று ஆஸ்திரேலியப் பிரதமர் பொப்ஹோக், பிஜி பிரதமர் மாராவுடன் பேச்சுக்கள் நடத்தியதைத் தொடர்ந்து நெருக்கடி தீர்ந்தது

பிஜி [illegible] விஜயம் செய்யும்போது. எதிர்க் கட்சித் தலைவர் பவித்ராவுடன் பேச்சுக்களை ஆஸ்திரேலிய அமைச்சர் நடத்தலாம் என்று பிஜி பிரதமர் பேச்சுக்களின் போது தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து நிறுத்தப்பட்ட உதவியுடன் மேலும் 10 மில்லியன் டாலர் நிதி உதவியை பிஜிக்கு வழங்க ஆஸ்திரேலிய பிரதமர் உடன்பட்டார். (எ)

### வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயிலில் இன்று தேர்

# கருநீலவண்ணனைக் கைதொழுதால் பெருநிலமளித்துத் திருவருள் புரிவான்

ஈழத்துத் திருப்பதி என்று போற்றப்படும் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயில் தேர்த் திருவிழா இன்று ஆகும்.

அதனை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகின்றது.

நினைப்பவர் மனம் கோயிலாகக் கொண்டவன்ஸ்ரீமந் நாராயணன். கேசவன், மாதவன், கண்ணன், கோவிந்தன், கோபாலன், மதுசூதனன், ஸ்ரீதரன், பத்மநாபன், தாமோதரன் என இன்னோரன்ன பல பெயர்களால் அழைக்கப்படும் மகாவிஷ்ணு காத்தற் கடவுளாவார்.

உலகத்தின் கண்ணுள்ள சர்வ ஜீவராசிகளையும் காத்து ரட்சிக்கும் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா வேங்கடேச வரதராஜப் பெருமாள் எனும் நாமகரணஞ் சூட்டப்பெற்று வண்ணையில் எழுந்தருளி வழிபடும் அடியார்களின் இன்னல்களைந்து, துன்பம் நீக்கி, துயரது அகற்றி வருகின்றார். சங்கடம் தீர்க்கும் வேங்கடேசனாக விளங்குகின்றார்.

'ஓம் நமோ நாராயணாய' என்று ஒருதரம் சொன்னால் பிறவிப்பிணி தீரும், நோய் அகலும், ஆன்ம ஈடேற்றம் கிடைக்கும். சிவபெருமானின் மந்திரம் 'நமசிவாய' என்பது. மகா விஷ்ணுவின் மந்திரம் 'நாராயணாய' என்பது. நாராயணாய என்பதன் இரண்டாம் எழுத்து'ரா'. நமசிவாய என்பதன் இரண்டாம் எழுத்து'ம'. இரண்டையும் சேர்த்தால் ''ராம'' என்று வருகிறது.

ஆகவே ராம நாமத்தின் மஹிமை சொல்லில் அடங்காதது. நாம் நல்ல செல்வச் செழிப்போடு வாழ — துயர் யாவும் நீங்க — திருவருள் பெற்று முத்தியின்பம் பெற வகை செய்வது நாராயணா எனும் நாமம். இதன் பெருமையை —

'குலந் தரும் செல்வந் தந்திடும்
அடியார் படுதுயராயின வெல்லாம்
நிலந்தரம் செய்யும் நீள் விசும்பருளும்
அருளொடு பெருநில மளிக்கும்
வலந்தரும் மற்றுந் தந்திடும்
பெற்ற தாயினும்
ஆயின செய்யும்
நலந் தரும் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராயணா எனும் நாமமே''

— என்ற பாடல் விளக்கி நிற்கின்றது.

ஈரடியாலே மூவுலகளந்த பெருமாள் நெடியாய வல்வினைகள் தீர்ப்பவர். வெண்ணை திருடித் தின்ற கண்ணன் மண்ணையும் தின்றான். 'எங்கே வாயைத் திற' என்று தாய் யசோதை கேட்டதும் கண்ணன் வாயைத் திறந்தான். [illegible] மாலவன், மாதவன், வானவர்க்கும் எட்டாத தூயவன்.

அங்ஙனம் வெண்ணை திருடி, மண்ணைத் தின்று திருவிளையாடல்புரிந்த கண்ணனே இங்கு யாழ் வண்ணையிலும் அமர்ந்திருந்து அருள்மழை பொழிகின்றான்.

'நெடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே நெடியானே வேங்கடவா

- நிதர்ஸன் -

நின்கோயிலின் வாயில
அடியாரும் வானவரும்
அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்துன்
பவளவாய் காண்பேனே'

என்று ஓர் அடியார் பாடுகின்றார்.

'தர்மம் குன்றி அதர்மம் மேலோங்கும்போது நான் அவதாரம் செய்து அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலை நிறுத்தி துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனஞ் செய்வேன்' என்று கண்ணன் கீதோபதேசத்தில் கூறியுள்ளான்.

'கடமையைச் செய். பலனை எதிர்பாராதே' இது கீதை கூறும்பாதை. ஆகவே மானிடப் பிறவி எடுத்த நாம் ஸ்ரீ மகா விஷ்ணுவை வழிபட்டு திவ்ய திருநாமமாம்நாராயணாய மந்திரத்தைச் செபித்து உய்தி பெறலாம்.

கருநீல வண்ணனைக் காலமெலாம் கைதொழுதால்பெருநில மளித்துத் திருவருள் புரிவான்— வரமது வேண்டித் தவ [illegible] உளம் [illegible] தில் வந்து உறைந்து நிற்பான கண்ணன்.

பச்சை மாமலை போல் மேனி
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரரேறே
ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான் போய்
இந்திரலோகமாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகருளானே.

## வண்ணை யமர்ந்த அருள்வாசா!

வாசு தேவ பரந்தாமா
சோதை மகிழ்ந்த அரிராமா
பின்னை மகிழ்ந்த பிராணேசா
வண்ணை யமர்ந்த அருள்வாசா!
பூவுலக குண்டுமிழ் சிகரனே
போற்றினே னுன்னடி மாதவனே
கோபாலா அரி கோவிந்தா
கோகுல நந்தன ஸ்ரீபாலா
எங்கு நிறைந்த பாம்பொருளே
எந்த விடர்வினை தீர்த்தருளே
வேங்கட மாமலை யோங்கிபவா
ஈந்து போலுன தருள்தரவா.

— பண்டிதர் நெ. வை. செல்லையா

**சமய நிகழ்வுகளில்**

### சூராவத்தையில் விசேஷ பூசை அபிஷேகம்

சூராவத்தை முத்துமாரியம்மன் கோயில் பரிபாலன சபையால், சூராவத்தை முத்துமாரியம்மன் கோயிலில் எதிர்வரும் 26 ஆம் திகதி பிற்பகல் தமிழ்த்தியாகி திலீபனின் ஆன்ம சாந்திக்காக விசேஷ அபிஷேகமும் பூசையும் நடைபெறும் (இ)

### இன்று தேர்

கொண்டாவில் கிழக்கு ஸ்ரீநாராயண தேவஸ்தான தேர்த் திருவிழா இன்று புதன்கிழமை நடைபெறுகிறது.

இவ்வருடமும் மஹோற்சவம் வழமைபோல் சிறப்பாக நடைபெற்று வருவது குறிப்பிடத் தக்கது. (க-69)

<u>இவ்வருடம்</u>

## மூன்றும் தவணையில் பொதுப்பரீட்சை

பலாலி செப் 21

இவ்வருடம் மூன்றும் தவணைக்கான வகுப்பேற்றப் பரீட்சைகளை யாழ் கல்வித் திணைக்களம் பொதுப்பரீட்சையாக நடத்தவுள்ளது.

ஆண்டுகள் 4, 5 6, 7, 8, 9, இற்கான பரீட்சைகளே இவ்வாறு நடத்தப்படவுள்ளன.

வை தவிர்ந்த 11 ஆம் ஆண்டிற்கான (க. பொ த சாதாரண தர) பயிற்சிப் பரீட்சைகளை சில வட்டாரங்கள் இணைந்து அதிபர்கள் சங்கம் நடத்தவுள்ளதாகவும் -

ஆண்டுகள் 1, 2 3, இற்கான பரீட்சைகளையும் சில கொத்தணிகள் இணைந்து நடத்தத் திட்டமிட்டுள்ளதாகவும் அறியவந்துள்ளது. (க-119)

## திலீபன் நினைவாக அன்னதானம்

சாவகச்சேரி, செப் 21

தியாகி திலீபனுக்கு தமது அஞ்சலியைச் செலுத்தும் முகமாக இன்று புதன்கிழமை மதியம் சாவகச்சேரி முத்துமாரி அம்மன் கோயிலில் விசேஷ அன்னதானம் இப்பகுதி வாழ் இளைஞர்களினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (இ)

## உண்ணாவிரதம்

காரைநகர் செப் 21

காரைநகர் வர்த்தக சங்கம் மற்றும் வலந்தலை கடற்றொழில் சங்கம் பிரஜைகள் குழுக்கள் போன்ற பொதுஸ்தாபனங்களின் வேண்டுகோளின் பேரில் தியாகச் சுடர் திலீபனின் ஒருவருட நினைவை ஒட்டி காரைநகரிலுள்ள சகல வர்த்தக நிலையங்களும் பூட்டப்பட்டு காரைநகர் வாரிவளவு பிள்ளையார் கோவிலில் ஒருநாள் உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டது. (இ-73

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
• தரமான வர்ண நிழற்படப் பிரதி ஒன்று5/-
• நெகடிவ் (PROCESSING) செய்தல் இலவசம்
• சிறப்பான வர்ண நிழற்படச்சுருள்கள்
KODAK FUJI KONICA
TUDOR FORTE B/W
பெற்றுக்கொள்ள நாடுங்கள்

# உதயன்

21 - 09 - 1988 புதன்கிழமை

எம்மிடம் வர்ண நிழற்படப்பிரதிகள்
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
வர்ண நிழற்படச் சுருள்கள
போட்டோ அல்பங்கள் இலவசம
மேலதிக விபரங்களுக்கு
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## பிறந்த நாள் பரிசாகக் குண்டுப் பார்சல்

கொழும்பு, செப்.21
வெள்ளவத்தையில் வசிக்கும் பொலீஸ் உயர் அதிகாரி ஒருவரின் மகனுக்குப் பிறந்தநாள் பரிசாக விஸ்கிப் போத்தலுக்குள் வைக்கப்பட்ட கைக்குண்டுப் பார்சல் ஒன்று பரிசாக வழங்கப்பட்டது.

என்னும் அந்தப்பார்சலில் சந்தேகம் ஏற்படவே பொலீஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

குண்டுகளைச் செயலிழக்கச் செய்யும் இராணுவப் பிரிவினரால் குண்டுசெயலிழக்கச்செய்யப்பட்டது.

இந்தச்சம்பவம் கடந்த 17-ஆம் திகதி நடைபெற்றது. (ஒ-க)

## ஈ.பி.ஆர்.எல்.எவ் அலுவலகம் திறப்பு

வவுனியா, செப்.21
அரசியல் வேலைகளைப் பரவலாக்கவும், மக்கள் தொடர்பை இலகுவாக்குவதற்குமாக வவுனியா பஸ்நிலைய மேல்மாடியில் ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கத்தின் அலுவலகம் செயற்படத் தொடங்கியுள்ளது.

இந்த அலுவலகத்தை ரெலோத் தலைவர் திரு. செல்வம் கடந்தவாரம் சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைத்தார். (ஒ-164)

## யாகப்பர் ஆலயத்தில் அன்னதானம்

குருநகர், செப்.21
திலீபன் உயிரைத் தியாகம் செய்து தியாக நிலை அடைந்ததினமான செப்ரம்பர் மாதம்26ஆம் திகதிகாலை 10-50மணிக்குக் குருநகர் யாகப்பர் ஆலயப் பங்கில் அன்னதானம் வழங்குவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதனையடுத்துப் புனித யாகப்பர் ஆலயத்தில் அஞ்சலி இரங்கற் திருப்பலி பங்குத் தந்தை வண-பிதா பி. எம். இம்மானுவேல் அவர்களால் ஒப்புக் கொடுக்கப்படும்.

திருப்பலியில் சலந்து கொள்ளும் மக்கள் அதையடுத்து ஊர்வலமாகத் திலீபன் உண்ணாவிரதம் இருந்து மரணித்த நல்லூர் மைதானத்தை நோக்கிச் செல்வதற்கும் ஆயத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. (ஒ-51)

## சேவைக்கால பயிற்சி வகுப்பு நாளை நடைபெறும்

யாழ்ப்பாணம், செப்.21
கடந்த 16 ஆம் திகதி வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவிருந்த சமூகக்கல்வி சேவைக்காலப் பயிற்சி வகுப்பு நாளை 22 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-69)

விரைவில் வெளிவரவிருக்கும்

# ஜனாதிபதி தேர்தல் விஞ்ஞாபனங்களில் தமிழர் பிரச்சினைக்கு முக்கிய இடம்?

கொழும்பு, செப்21
ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ள கட்சிகளின் வேட்பாளர்கள் கூடிய விரைவில் தங்களுடைய தேர்தல் விஞ்ஞாபனங்களை வெளியிடவுள்ளனர்.

இந்தத் தேர்தலில் போட்டியிடுவதற்காக ஐ.தே.க சார்பில் திரு. ஆர். பிரேமதாசாவும், சுதந்திரக் கட்சி சார்பில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களின தேர்தல் விஞ்ஞாபனங்களில் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது சம்பந்தமான வழிமுறைகள் சம்பந்தமாக முக்கிய கவனம் செலுத்தப்படவுள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

தமிழர் பிரச்சினைக்கான தீர்வு முறை மேலோட்டமாக அன்றி, மிகவும் விளக்கமாக இருக்குமாம்.

தமிழர்களின் அபிலாஷைகளை முழுமையாக பூர்த்தி செய்யாத இலங்கை-இந்திய ஒப்பந்தத்துக்கே எதிரான போக்குடைய இவர்கள், எவ்வாறு தமிழர்களுக்கு முழுமையான தீர்வை வழங்கப் போகிறார்கள் எனத் தமிழர் வட்டாரங்களில் கேள்வி எழுந்துள்ளது (ஒ-3)

## உடுத்துறையிலும் உண்ணாவிரதம்

தாளையடி, செப். 21
வடமராட்சி கிழக்கிலும், திலீபனின் ஓராண்டு நினைவு வாரத்தை நினைவு கூரும் முகமாக பல்வேறு இடங்களில் தொடர்ச்சியான உண்ணாவிரதங்கள் இடம்பெற்று வருகின்றன.

கடந்த திங்கட்கிழமை உடுத்துறை வேம்படி வீதியில் உண்ணாவிரதம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நூற்றுக்கணக்கான பொது மக்கள் உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டார்கள். (ஒ-144)

## ஒரே பார்வையில் ஒலிம்பிக்

சோல், செப். 21
சோல் ஒலிம்பிக் போட்டியில் பதக்கங்கள் பெற்ற நாடுகளின் விவரங்கள் வருமாறு;

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| ரஷ்யா | 6 | 1 | 4 |
| பல்கேரியா | 3 | 2 | 1 |
| அமெரிக்கா | 2 | 1 | 2 |
| கி. ஜேர்மனி | 2 | 1 | 1 |
| சீனு | 1 | 2 | 3 |
| ருமேனியா | 1 | 1 | 0 |
| பிரிட்டன் | 1 | 0 | 0 |
| ஆஸ்திரேலியா | 1 | 1 | 0 |
| செக்கோஸ்லேவேகியா | 1 | 0 | 0 |
| யூகோஸ்லேவியா | 1 | 0 | 0 |
| இத்தாலி | 1 | 0 | 0 |
| சுவீடன் | 0 | 2 | 1 |
| தென்கொரியா | 0 | 2 | 0 |
| ஹங்கேரி | 0 | 1 | 1 |
| போலந்து | 0 | 1 | 0 |
| மே ஜேர்மனி | 0 | 1 | 1 |
| ஜப்பான் | 0 | 1 | 0 |
| பிரான்ஸ் | 0 | 0 | 1 |

(ஒ-எ)

## ஆரம்ப ஆசிரியர்: சேவைக்கால முன்பயிற்சி இன்று முதல்

யாழ்ப்பாணம், செப் 21
இரண்டாம் கட்ட, ஆரம்ப ஆசிரியர்களுக்கான சேவைக்கால முன் பயிற்சி இன்று ஆரம்பமாகிறது.

யாழ் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் 21 தினங்கள் தொடர்ச்சியாக இந்தப் பயிற்சி நடத்தப்படும் (ஒ-க)

## வவுனியா நகரில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
திடலில் நின்றிருந்த ஒரு மாணவனும் கல்விக் கந்தோர் கணக்காளர் காவலாளிகள் இருவர் உட்பட 4 பேர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

சிறிது நேரத்தில் கணக்காளர் விடுவிக்கப்பட்டார். இதனால் கல்வி அலுவலக வேலைகள் ஸ்தம்பிதமடைந்தன. (ஒ-164)

## பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ. 77 லட்சம் ரூபாவை உதவியாக ரி. ஆர். ஆர். ஒ. வழங்கியது

யாழ்ப்பாணம், செப் 21
வடக்கு கிழக்கு மாகாணங்களில், இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழ் அகதிகள் புனர்வாழ்வு கழகம் (ரி ஆர். ஆர். ஒ) சடந்த வருடத்தில் (1987) மொத்தம்சுமார் 77 லட்சம் ரூபாவை உதவியுள்ளது.

உடனடி நிவாரணம், மேலதிக நிவாரணம், வைத்திய வசதிக்கான உதவி, கல்வி வசதிக்கான உதவி என்ற நான்கு வகைகளில் 76 லட்சத்து 81 ஆயிரத்து 673 ரூபாவும் உதவப்பட்டது.

ரி ஆர். ஆர். ஒ. ஸ்தாபனத்தின் 1987 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் இந்த விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, அம்பாறை, வவுனியா, நீர்கொழும்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த குடும்பங்களுக்கு மேற்படி நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன.

கடந்த வருடம் வழங்கப்பட்ட நிவாரண உதவிகள் குறித்து பிரஸ்தாப அறிக்கையில் குறிப்பிட்டிருக்கும் விவரம் வருமாறு:-

இனக் கலவரங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட உடனடி நிவாரணம் 19,75,960 ரூபாமேலதிக நிவாரணம் ரூபா 8,45,891/-

★ மருந்து உதவி 34,99,191ரூபா 25சதம்.

★ கல்வி வசதி நிவாரணம் ரூபா 13,59,631. (ஒ-ஐ)

## செவ்வாய்க் கிரகத்தை நாளைமுதல் பார்க்கலாம்

செவ்வாய்க்கிரகத்தை நாளைமுதல் பார்க்கக் கூடியதாயிருக்கும் என்று இலங்கை வானசாஸ்திர சங்கம் அறிவித்திருக்கிறது

17 ஆண்டுகளின் பின்னர் முதல் தடவையாக செவ்வாய்க் கிரகம் பூமிக்கு அருகே 3 கோடி 65 லட்சம் மைல் தொலைவில் நாளைமுதல் வருகிறது.

நான்கு அங்குல விட்டமுள்ள தொலைநோக்கியூடாக மிகவும் கவனமாக ஒருவர் பார்த்தால் செவ்வாய்க் கிரகத்தைக் காணக்கூடியதாக இருக்கும்

செவ்வாயை மூடியுள்ள முகிற் கூட்டங்களை அப்போது காணக் கூடியதாக இருக்கும். அக்டோபர் இறுதிவரை பூமிக்கு அருகே செவ்வாய்க்கிரகம் இருக்கும்

இதற்குப் பிறகு 2003 ஆவது ஆண்டுவரை செவ்வாய் பூமிக்கு அருகே வராது.

இப்படி சங்கத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது (ஒ-எ)

## யுத்த நிறுத்த...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
அவர்கள் நம்பிக்கை தெரிவித்திருந்தார்கள். பிரசைகளின் அந்த வேண்டுகோளுக்குச் செவிசாய்த்தே, இந்திய அரசாங்கம், இலங்கை அரசாங்கத்துடன் கலந்தாலோசித்து, இப்போதைய யுத்த நிறுத்தத்தை செப்டெம்பர் 20 ஆம் திகதி காலை 7 மணி தொடக்கம் மேலும் ஐந்து நாட்களுக்கு நீடிக்க முடிவு செய்தது — இவ்வாறு அந்த அறிக்கையில் [illegible]

## கண்டு எடுக்கப்பட்ட பாஸ்போர்ட்

யாழ்ப்பாணம் செப். 21
கனகசபாபதி குகநேசன் என்பவரின் J0259193இலக்கமுடைய பஸ்போர்ட் ஒன்று கண்டெடுக்கப்பட்டு உதயன் அலுவலகத்தில் ஒப்படைக்ப்பட்டுள்ளது.

உரியவர் நேரடியாக அலுவலகத்துக்கு வந்து தகுந்த ஆதாரங்களைக் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம். (ஒ)

## ஒலிம்பிக் சைக்கிள்ஓட்டத்தில சோவியத் வீரர் சாதனை!

சோல், செப் 21
சோல் ஒலிம்பிக்கில் ஆயிரம் மீட்டர்சைக்கிள் ஓட்டப் போட்டியில் சோவியத்யூனியன் வீரர் புதிய உலக சாதனை ஒன்றை ஏற்படுத்தினர்.

அத்தூரத்தைக் கடக்க அவர் எடுத்தநேரம் ஒரு நிமிடம் 4.49 விநாடிகள் ஆகும்

ஹாக்கிப் போட்டியில், அரைஇறுதிப் போட்டியில் இடம்பெறும் வாய்ப்பு இந்திய அணிக்குக் கிடைத்திருக்கிறது.

நேற்று மேற்கு ஜேர்மனியுடன் இந்தியா மோதியது. இப்போட்டி வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்தது. இரு அணிகளும் தலா ஒரு கோல் போட்டன.

ஒலிம்பிக் போட்டியின் நான்காவது நாளான நேற்று 21 போட்டிகள் முடிவடைந்தன. (ஒ-ஏ)

## திரு. வ. நடேசலிங்கம்
(உரும்பிராய்)

உரும்பிராய் வயித்திலிங்கம் நடேசலிங்கம் அவர்களின் இறுதிக்கிரிகை தவிர்க்கமுடியாத காரணத்தால் குறிப்பிட்டபடி நடைபெறவில்லை

இறுதிக் கிரியைகள் இன்று புதன்கிழமை 21-9-88 மாலை 3 மணிக்கு நடைபெறும்.

வெண்ணிலா, உரும்பிராய். — ந. சந்திரகுமார் (6713)

## செல்வி முத்துமலர் ஜீவரட்ணம்
(இளைப்பாறிய ஆசிரியை சுண்டுக்குளி மகளிர் பாடசாலை)

உடுவிலைச் சேர்ந்த செல்வி முத்துமலர்-ஜீவரட்ணம் காலமாகிவிட்டார் இவர் காலஞ்சென்ற திருவாளர் டி. பி. ஜீவரட்ணம்- திருமதி தங்கம்மா ஜீவரட்ணம் ஆகியோரின் அன்பு மகளும், திருமதி நேசமலர் யோகரட்ணம், பஸ்டர் டி. எஸ். அரியரட்ணம் (பாகிஸ்தான்) ஆகியோரின் அன்பு சகோதரியும், திரு அ யோகரட்ணம், திருமதி இந்திராணி அரியரட்ணம் (பாகிஸ்தான்) ஆகியோரின் மைத்துணியும் மித்திரன் (கனடா), சாந்தோ, சுகந்தன் ராஜரட்ணம் (Commercial Bank) லோஜி, லவாஜ ஆகியோரின் பெரியம்மாவும், மஜேஜின் பாட்டியுமாவார். அடக்க ஆராதனை ஒழுங்குகள் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
அமரேஷ்
Uduvil. (6710)

## திரு. அ. ப. சிங்கராயர் (சிங்கம்)
(ஒய்வுபெற்ற சுங்கத் திணைக்கள உத்தியோகத்தர்)

ஊர்காவற்றுறை புனித ஜேம்ஸ் வீதியைச் சேர்ந்த திரு. அந்தோனிப்பறுநைத்து சிங்கராயர் காலமாகிவிட்டார். இவர் செல்வமாணிக்கத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ஆசைப்பறுநைத்து (சுங்க இலாகா), துரைஐயா (U. K.), செபமாலைமுத்து (சுங்க இலாகா), பிலுப்புப்பிள்ளை (பட்டின சபை), சூரி சந்தியாப்பிள்ளை (அவுஸ்திரேலியா), பிரான்சிஸ், ஜசிந்தா ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி டெய்சி ஜேட்றூட் அம்மா ஆசைப்பறுநைந்து, திருமதி பிலோமினு துரைஐயா (ஆசிரியை, புனித மரியாள் மகளிர் பாடசாலை ஊர்காவற்றுறை), திருமதி யூலி சந்தியாப்பிள்ளை, திருமதி ஜொய்சி பிரான்சிஸ், திரு. கிறிஸ்துதாசன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனுரும் ஜினோ (ஆசிரியை, முருகவேள் வித்தியாலயம், எழுவைதீவு), லயனல் ஜென்சன், அனட்றா ஜேம்ஸ், ஜென்ரா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னரின் நல்லடக்கம் ஊர்காவற்றுறை புனித ஜேம்ஸ் சேமக்காலையில் புதன்கிழமை 21—9—88 மாலை 3-00 மணிக்கு நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
S. செபமாலைமுத்து (தங்கையா)
(6716)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நல்லம்மா பரராஜசிங்கம்
(காலஞ்சென்ற கஸ்தூரியார் வளவு வைத்திய சிரோன்மணி பரராஜசிங்கம் அவர்களின் பாரியார்)

திருமதி நல்லம்மா பரராஜசிங்கம் காலமானார். அன்னார் காலஞ்சென்ற வைத்திய சிரோன்மணி கணபதிப்பிள்ளை பரராஜசிங்கத்தின் அன்பு மனைவியும், திருமதி யோகேஸ்வரி குணசிங்கம், ஆயுர்வேத வைத்தியர் ரகுநாதன், திருமதி கமலாசனி சிவநாதன், யோகநாதன் (Walkers, Colombo), சிவகுமாரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற தபால் அதிபர் குணசிங்கம், இலங்கை மின்சார சபை (சுன்னுகம்) சிவநாதன், கிருஷ்ணராணி, சுகுணு ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி வத்சலா சாந்தசொரூபன், ராஜ்மோகன் (Project Engineering Co Ltd., Colombo), கௌசலா (ஆசிரியை, விவேகானந்தா மகா வித்தியாலயம், கொட்டாஞ்சேனை), சியாமளா (தொழில்நுட்பக் கல்லூரி, கொக்குவில்), பத்மஜா (யாழ் இந்து மகளிர் கல்லூரி), சுகந்தினி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), சிவகுமன் (யாழ் இந்துக் கல்லூரி), கோபிகா (யாழ் இந்து மகளிர் கல்லூரி), சாம்பவி (யாழ் வைத்தீஸ்வரா வித்தியாலயம்), மயூரன் (யாழ் மத்திய கல்லூரி) ஆகியோரின் பேத்தியும், சாந்தசொரூபனின் (Commercial Bank Ltd., Jaffna) பேத்தி முறையானவருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (21 - 9 - 88) புதன்கிழமை காலை 10-00 மணி அளவில் நடைபெற்று யாழ் கோம்பையன் மணல் மயானத்துக்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்

தகவல்:
குடும்பத்தினர்
93/21, இந்து மகளிர் ஒழுங்கை
சுந்தர்மடம், யாழ்ப்பாணம். (C 77)

### திருமதி மங்கையர்க்கரசி கனகரத்தினம்
(இராமநாதன் கல்லூரி இளைப்பாறிய ஆசிரியை)

திருநெல்வேலியைச் சேர்ந்த திருமதி மங்கையர்க்கரசி கனகரத்தினம் அவர்கள் 20-9-88 செவ்வாய்க்கிழமை பகல் 12 மணியளவில் சிவபதமடைந்துவிட்டார்கள்.

அன்னார் கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாசாலை அதிபராயிருந்து இளைப்பாறிய த. கனகரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும் ஆனந்தசிவம் (ஜேர்மனி) சண்முகநாதன் (உடவளவை) கணேஜநாதன் (U.K.) பரிபூரணனந்தன் (U. K.) திருமதி கமலேஸ்வரி சந்திரா, திருமதி பரமேஸ்வரி மகாலிங்கம் திருமதி சர்வேஸ்வரி நவநீதன் திருமதி மங்களேஸ்வரி செந்தில்குமரன் (U. K) என்போரின் அருமைத் தாயாரும் திருமதி அகிலாம்பிகை ஆனந்தசிவம் (ஜேர்மனி) திருமதி மேனகா சண்முகநாதன் (ஆசிரியை இராமநாதன் கல்லூரி) திருமதி சாந்தவடிவாம்பிகை கணேஜநாதன் (U K), திருமதி சித்திரா, பரிபூரணனந்தன் (U. K) திரு க.சந்திரா பொ. மகாலிங்கம், தி நவநீதன், வி. செந்தில்குமரன் (U K) ஆகியோரின் அன்பு மாமியாரும் சுகேந்திரன் (U K) சசிந்திரன் முரளீந்திரன், வைதேகி, பிருந்தா துர்க்கா தீபனு, அபிராமி (U. K.) செந்தூரன் (U.K) அருண் (ஜேர்மனி) ரமண் (ஜேர்மனி) ஆதவன் (U K.) ஆகியோரின் அருமைப் பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் திருநெல்வேலி வடக்கு ஆடியபாதம் வீதி இல்லத்தில் 21-9 88 புதன்கிழமை நடைபெற்று பிற்பகல் 4 மணிக்கு கொக்குவில் மயானத்தில் தகனம் செய்யப்படுமென்பதை உற்றூர், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
த. கனகரத்தினம்
ஆடியபாதம் வீதி. திருநெல்வேலி. (6717)

### திரு. விஸ்வலிங்கம் தியாகராஜா
(Retired Stenographer - District Courts)

திரு. விஸ்வலிங்கம் தியாகராஜா அவர்கள் 20 9- 88 செவ்வாய்க்கிழமை காலமானுர். இவர் காலஞ்சென்ற திரு. திருமதி விஸ்வலிங்கத்தின் அன்பு மகனும், நேசரத்தினத்தின் அன்புக் கணவரும், திருக்குமார் (Australia), அனுஷியா (Australia), சாவித்திரி (Australia), ராஜ்குமார் (ஷப்ரு யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புந் தந்தையும், மாறி (Australia), மோகனராஜா (Australia), திருநாவுக்கரசு (Australia), பவானி ஆகியோரின் மாமனுருமாவார். அன்னரின் ஈமக்கிரியைகள் 21- 9- 88 புதன் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணிக்கு வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத் தகவலை உற்றூர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: ராஜ்குமார்
32, Convent Road,
Jaffna. (C.79)

வெளிவந்து விட்டது!
மனதில் இலகுவாகப் பதியக்கூடிய முறையில்
சமூகக்கல்வி ஆண்டு 11
பகுதி II (100 விடயங்கள்)
குறிப்புகள் 16/50
ஆக்கம்: நா. மயில்வாகனம்
(பரியோவான் கல்லூரி)
பூபாலசிங்கம் } புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
ஸ்ரீலங்கா
(6714)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட் [illegible] யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 21 09- 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road Jaffna on Wednesday 21st September 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org